Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37 கதிர் : 77 | வெள்ளிக்கிழமை 11 பெப்ரவரி 2022 | தை 29 ஆம் நாள் வள்ளுவர் ஆண்டு 2053 | பக்கங்கள்: 16 | விலை: 30/=

**கொரோனா**

நேற்று 1,297
மொத்தம் 6,24,545

**உயிரிழப்பு**

நேற்று 31
மொத்தம் 15,722

# பயங்கரவாதத் தடைச் சட்டம் பழிவாங்கலுக்கே பயன்படும்!

## சர்வதேசத்தை ஏமாற்றவே திருத்த வரைவு

## ரவூப் ஹக்கீம் எம்.பி. நாடாளுமன்றில் தெரிவிப்பு



கொழும்பு, பெப்ரவரி 11

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் திருத்த வரைவில் ஐரோப்பிய நாடுகள் கேட்டுக் கொண்டுள்ள திருத்தங்கள் இடம்பெற்றுள்ளதா என்பது தொடர்பில் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் மழுப்புகின்றார் – என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார். நாடாளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டவரைவு மீதான இரண்டாம் நாள் விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். 15

## டிப்பருடன் மோதி இளைஞர் சாவு!

### ஒருவர் படுகாயம்

யாழ்ப்பாணம், பெப்.11

தெல்லிப்பழை, வறுத்தலை விளானில் நேற்று நடந்த விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார். மற்றொருவர் படுகாயமடைந்துள்ளார். 11

முச்சந்தி முரளி



"கல்தோன்றி மண் தோன்றாக் காலத்து தமிழ் என்டு பீத் துறமே தவிர ஒரு கல்வெட்டில கூட தமிழை முன்னுக்கு வைக் கிறளவுக்கு எங்களிட்ட தைரி யம் இல்லைப் பாருங்கோ...!"

## நில அபகரிப்புக்கு எதிராக கொக்கிளாயில் போராட்டம்

யாழ்ப்பாணம், பெப்.11

கொக்கிளாய்தொடக்கம்நாயாறு வரையான தமிழ் மக்களின் பாரம்பரிய நிலங்களை கையகப்படுத்தும் செயற்பாட்டுக்கு எதிர்ப்புத் தெரிவித்து நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு கொக்கிளாய் பாடசாலை முன்பாகப் போராட்டம் நடத்தப்படவுள்ளது. 15

## சுகாதாரத்துறையின்- போராட்டத்துக்கு தடை!

### உத்தரவு பிறப்பித்தது நீதிமன்று

கொழும்பு, பெப்.11

அரச தாதியர் சங்கம் மேற்கொண்டுள்ள பணிப்புறக்கணிப்பை தொடர்ந்து முன்னெடுப்பதை தடுக்கும் வகையில் நீதிமன்றம் 15

## பல்கலைக்கழகத்தை திறக்க வவுனியா வருகிறார் கோத்தா!

வவுனியா, பெப்.11

வவுனியாவுக்கு இன்று வரவுள்ள ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, வவுனியா பல்கலைக் கழகத்தை வைபவரீதியாகத் திறந்துவைக்கும் நிகழ்வில் கலந்துகொள்ளவுள்ளார். வவுனியா பல்கலைக்கழகம் 1991ஆம் ஆண்டுவடமாகாண இணைந்த பல்கலைக்கழகக் கல்லூரியாக உருவாக்கப்பட்டது. பின்னர், 11

## வடக்கு மீனவரின் அழிவுக்கு இலங்கை அரசே பொறுப்பு!

### கஜேந்திரகுமார் எம்.பி. நாடாளுமன்றில் சுட்டிக்காட்டு



கொழும்பு, பெப்.11

சொந்த நாட்டு மீனவர்களின் பாதுகாப்புத் தொடர்பாக உத்தரவாதப் படுத்தவேண்டிய இலங்கை அரசு எந்த உத்தரவாதமோ - வாக்குறுதியோ வழங்காதிருக்க, வடக்கு மீனவர்களின் பிரச்சினைகள் தொடர்பாக இந்தியா நேரடியாக எமக்கு உறுதிமொழி 15

## வவுனியா பல்கலைக் கல்வெட்டில்- இடம்பெயர்ந்த தமிழ்!



வவுனியா, பெப்.11

வவுனியா பல்கலைக் கழகம் இன்று வைபவ ரீதியாக ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச வால் திறக்கப்படவுள்ள நிலையில், திரைநீக்கம் செய்யப்பட வுள்ள கல்வெட்டில் அவசர மாற்றங்கள் 15

## தூக்கில் தொங்கும் அச்சத்திலேயே உளறுகிறார் ஈ.பி.டி.பி.யின் எம்.பி.!

### கஜேந்திரன் எம்.பி. கிண்டல்

கொழும்பு, பெப்.11

காணாமல் ஆக்கப்பட்டோர் விடயத்தில், பலர் காணாமல் ஆக்கப்பட்டதற்கு ஈ.பி.டி.பி. அமைப்பும் காரணம். இந்த விடயம் 15

## மன்னாரில் ஏலம்; படகுகள் மாயம்!

மன்னார், பெப்.11

எல்லைதாண்டி மீன்பிடித்த குற்றச்சாட்டில், தமிழக மீனவர்களிடம் இருந்து பறிமுதல் செய்யப்பட்ட படகுகள், உரிய இடத்தில் இருந்து காணாமல் போனமையால் நேற்று 15

## விகிதாசார முறையிலேயே மாகாண சபைத் தேர்தல்

கொழும்பு, பெப்.11

மாகாணசபைத் தேர்தல் சட்டத்தை திருத்தி, பழைய விகிதாசார முறையின் மாகாண சபைத் தேர்தலை நடத்துமாறு அரசாங்கத்துக்கு யோசனையை வைக்க தேர்தல்முறை சீர்திருத்தக் குழு 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிரந்தரத் தீர்வுக்கான பயணத்தை எப்படி அமைத்துக் கொள்வது?

## நல்லூரில் தமிழ்த் தேசியக் கட்சிகளின் ஏற்பாட்டில் நாளை முக்கிய கலந்துரையாடல்

**யாழ்ப்பாணம், பெப். 11**

**தமிழ் மக்களின் அரசியல் எதிர்காலம் குறித்து ஆராயப்படவிருக்கும் மிக முக்கிய கலந்துரையாடலில் தமிழ் மக்களை அணி திரண்டு பங்கேற்குமாறு ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் அழைப்பு விடுத்துள்ளார்.**



இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கையின் சமகால அரசியல் நிகழ்வுகளில் தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு, இந்த விடயத்தில் இந்தியாவின் வகிபாகம், சர்வதேச, பிராந்திய அரசியல் நிலைவரங்கள் போன்ற பல விடயங்கள் தமிழ்த் தேசியப் பரப்பில் இருக்கக்கூடிய இலங்கை தமிழ் அரசுக் கட்சி, ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ், தமிழ்மக்கள் கூட்டணி, தமிழ்த் தேசியக் கட்சி ஆகியவை ஒருங்கிணைந்து நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு, கல்வியங்காடு இளங்கலைஞர் மண்டபத்தில் கருத்தரங்கு ஒன்றை நடத்தத் திட்டமிட்டுள்ளார்கள். இவர்களுடன் அரசியல் ஆய்வாளர்களும் தமது கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ள இருக்கின்றார்கள்.

பௌத்த அடிப்படைவாதம், சிங்கள-பௌத்த மேலாதிக்கம் போன்றவற்றில் ஊறித்திளைத்திருக்கும் அரசு, நாட்டின் பொருளாதாரத்தை வங்குரோத்து நிலைக்குக் கொண்டு சென்றுள்ளது.

உரமின்மையால் விவசாயம் பொய்த்துப்போய், நாட்டின் ஒட்டுமொத்த விவசாயிகளும் நடுத் தெருவுக்குத் தள்ளப்பட்டுள்ளனர். சிமெந்து இன்மையால் கட்டுமாணங்கள் அனைத்தும் அரைகுறையில் நிற்கின்றன. இதனால் கட்டுமானத் தொழிலாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பால்மா, எரிபொருள்களை தேடிப் பிடிப்பதே முயற்கொம்பாக உள்ளது. அத்தியாவசியப் பொருள்களுக்கும் தட்டுப்பாடு நிலவுகிறது. சகல பொருள்களும் கறுப்புச் சந்தையில் விலையுயர்ந்த நிலையில் விற்கப்படுகின்றன. நாட்டில் அரசாங்கம் என்ற ஒன்று இருக்கிறதா என்ற கேள்வியும் எழுந்துள்ளது. ஆனாலும்கூட நாட்டின் இனப்பிரச்சினையைத் தீர்த்து, பொருளாதாரத்தை உயர்த்த வேண்டும் என்ற அடிப்படை எண்ணம்கூட அரசிடம் இல்லை. இந்தியா, சீனா, பாகிஸ்தான், பங்களாதேஷ் என பிச்சைப்பாத்திரம் ஏந்தும் நிலையில்தான் இலங்கை அரசாங்கம் உள்ளது.

இவ்வாறான ஒரு சூழ்நிலையில், தமிழ் மக்களுக்கான நிரந்தரத் தீர்வு ஒன்றை நோக்கிப் பயணிப்பதில், தமிழ்க் கட்சிகள் என்ன செய்ய வேண்டும்? எப்படிச் செய்ய வேண்டும்? இதற்கான வழிமுறைகள் என்ன? எங்கே ஆரம்பிப்பது போன்ற பலவிடயங்களை இந்தக் கருத்தரங்கில் ஆராய இருக்கின்றார்கள். அனைவரும் கலந்து கொண்டு நமக்கான கருத்தரங்கைச் சிறப்பிக்குமாறு வேண்டுகிறோம்- என்றுள்ளது. (ஒ-5)

# பயங்கரவாதத் தடைச்சட்ட திருத்தம் நாடாளுமன்றில்!

கொழும்பு, பெப். 11

1979ஆம் ஆண்டு 48 ஆம் இலக்க பயங்கரவாதத் தடைச்சட்டத்தை திருத்துவதற்கான சட்டவரைவு நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்த சட்டவரைவு வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸினால் நாடாளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை முன்வைக்கப்பட்டுள்ளது. அத்தோடு, சட்டவரைவின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதம் இன்று இடம்பெறும் என வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

ஐரோப்பிய ஒன்றியம் - இலங்கைகூட்டுஆணைக் குழு சுட்டிக்காட்டியுள்ள குறைபாடுகளில் திருத்தங்களை மேற்கொள்வது தொடர்பான உறுதிமொழிகள் சட்டவரைவில் பரிசீலிக்கப்படுமா என சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் அமைச்சரிடம் கேள்வி எழுப்பினார்.

கேள்விகள் எழுப்பப்பட்ட போது, சட்டவரைவை முதலில் சமர்ப்பித்து பின்னர் விவாதிப்பதே நடைமுறை. சட்டவரைவு மீது விவாதம் நடத்தப்படும் போது விமர்சனங்களை முன்வைக்க லாம்.

சபையின் நிலையியற் கட்டளைகளுக்கு அமைவாகவே இந்த சட்டவரைவு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார். (ம-44)

# பேருந்து வராமையால் பரீட்சார்த்திகள் அந்தரிப்பு

சாவகச்சேரி, பெப்.11

தென்மராட்சி தெற்கினூடாக காலையில் சேவையில் ஈடுபடும் அரச பேருந்து வராமையால் க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் பலர் பெரும் சிரமத்தை எதிர்நோக்கினர்.

காலையில் யாழ்ப்பாணத்திலிருந்து தனங்களப்பு ஊடாக கொடிகாமம் செல்லும் அரச பேருந்தை மாணவர்கள், அரச பணியாளர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் பயன்படுத்தி வருகின்றனர். இந்நிலையில் நேற்றுக் காலை 7மணிக்கு வரவேண்டிய பேருந்து சேவையில் ஈடுபடாமையால் மாணவர்கள் பரீட்சைக்கு உரிய நேரத்துக்கு செல்ல முடியாமல் அந்தரித்தனர்.

பின்னர், மாணவர்கள் வீடுகளுக்கு அறிவித்ததையடுத்து மோட்டார் சைக்கிள் போன்ற வாகன வசதியுள்ளவர்கள் தமது பிள்ளைகளை அதில் ஏற்றிச் சென்றனர்.

இதன்போது வாகன வசதி செய்ய முடியாத மாணவி ஒருவரை அந்த நேரத்தில் பூநகரிக்குச் செல்வதற்காக மோட்டார் சைக்கிளில் வந்த ஒருவர் மாணவிக்குத் தலைக்கவசமின்றி ஏற்றிச் சென்று சாவகச்சேரி பரீட்சை மண்டபத்தில் இறக்கி உதவினார். (வ-9)

# தமிழர் பலத்தை உறுதிசெய்ய நாளை ஒன்றுகூடுங்கள்

## சித்தார்த்தன் அழைப்பு

யாழ்ப்பாணம், பெப். 11

தமிழ் மக்களின் ஒற்றுமையையும் பலத்தையும் உறுதி செய்வதற்கு நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு இளங்கலைஞர் மன்றத்தில் நடைபெறும் தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்களும் அரசியல் ஆய்வாளர்களும் கலந்துகொள்ளும் முதலாவது கருத்தரங்கில் கலந்து கொள்வதன் மூலம் கருத்துக்களுக்கு வலுச்சேர்க்குமாறு கேட்டுக்கொள்வதாக, புளொட் அமைப்பின் தலைவர் த.சித்தார்த்தன் அழைப்பு விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இன்று தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் இக்கட்டான காலகட்டத்தில் இலங்கையரசு தமிழ் மக்களின் இருப்பை இல்லாது செய்வதற்கு முயற்சி எடுப்பதுடன் தங்களுக்கான சர்வதேச ஆதரவை பெற்றுக் கொள்வதற்கான பரப்புரைகளை மிகவும் தீவிரமாக மேற்கொண்டு வருகின்றது.

இந்தக் காலத்தில் தமிழ் மக்கள் தமது நலன்சார் வலுவான அரசியல் நிலைப்பாட்டை எடுக்க வேண்டும் என்பது காலத்தின் கட்டாயமாகும்.

இலங்கைத் தமிழ் மீனவர்களுக்கும் தமிழ் நாட்டு மீனவர்களுக்கும் இடையில் காணப்படும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு முயற்சிக்காமல் தாமதப்படுத்துவதனூடாக அவ்விருதரப்பினர்களுக்குமிடையில் முரண்பாட்டை அரசு உருவாக்குகின்றது. இதுபோன்ற பல விடயங்க ளில் தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளை இல்லாது செய்வதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இவ்வாறானதொரு நிலையில், தமிழ் மக்கள் தங்கள் பலத்தை ஓரணியில் வெளிக் காட்டவேண்டிய தேவை எழுந்துள்ளது- என்றுள்ளது. (ஒ-5)

# முட்டை விலை விரைவில் ரூ.50?

கொழும்பு, பெப்.11

கால்நடைத் தீவனத்தின் விலை அதிகரிப்பால் முட்டை உற்பத்தியாளர்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர் என அகில இலங்கை முட்டை உற்பத்தியாளர் சங்கத்தின் செயலாளர் எச்.எம்.பி. ஆர். அழகோன் தெரிவித்துள்ளார்.

அரிசி, சோயா, மக்காச்சோளம் ஆகியவற்றின் விலை உயர்ந்துள்ளதுடன் கால்நடைத் தீவனம் மூடை 3 ஆயிரம் ரூபாவில் இருந்து 6 ஆயிரம் ரூபாவாக அதிகரித்துள்ளது. இந்த நிலையில் எதிர்வரும் நாள்களில் முட்டை ஒன்றின் விலை 50 ரூபாவை விடவும் அதிகரிக்கலாம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (வ-இ)

# இந்திய நிகழ்ச்சிநிரலின்படி செயற்படுகின்றது முன்னணி

## கடற்றொழிலாளர் இணையத் தலைவர் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், பெப். 11

இந்தியாவின் நிகழ்ச்சி நிரலின் கீழ் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் செயற்படுகிறார்கள் என்பது நேற்றிலிருந்து (நேற்று முன்தினம்) அம்பலமாகின்றது என வடக்கு மாகாண கடற்றொழிலாளர்கள் இணையத் தலைவர் என்.வி.சுப்பிரமணியம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரால் இழுவைமடி தொடர்பில் விசேட பிரேரணை ஒன்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவிருந்த நிலையில் இந்திய தூதரக அதிகாரி ஒருவர் குறித்த பிரேரணையை நாடாளுமன்றத்தில் கொண்டுவர வேண்டாம் என கூறியதற்கு இணங்க அந்தப் பிரேரணை கைவிடப்பட்டுள்ளது. அதிலிருந்து அந்தக் கட்சியினர் யாருடைய நிகழ்ச்சி நிரலின் கீழ் செயற்படுகின்றார்கள் என்று நாங்கள் புரிந்து கொள்ளக்கூடியதாக உள்ளது.

இனிவரும் காலங்களில் நாங்கள் யாரையும் நம்ப முடியாது. ஏனென்றால் ஒவ்வொருவரும் நிகழ்ச்சி நிரலின் கீழ்தான் செயற்படுகின்றார்கள் - என்றார். (ம-27)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மஹிந்தவின் சவாலை நாங்கள் ஏற்கின்றோம்

## முடிந்தால் உள்ளூராட்சி தேர்தலை நடத்துங்கள் என்கின்றது எதிர்க்கட்சி

**கொழும்பு, பெப். 11**

**தேர்தல் தொடர்பில் பிரதமர் மஹிந்த ராஜபக்ச விடுத்த சவாலை நாம் ஏற்கின்றோம். எனவே, முடிந்தால் உள்ளூராட்சிமன்றத் தேர்தலை நடத்தட்டும். அப்போது மக்கள் யார் பக்கம் என்பது தெரியவரும் என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி அறிவித்துள்ளது.**

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின்போதே ஐக்கிய மக்கள் சக்தியின் ஊடகப் பேச்சாளர் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார், கட்சியின் சார்பில் மேற்படி அறிவிப்பை விடுத்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

தங்களுக்கு வீதியில் இறங்கவும் முடியும், பாதயாத்திரை செல்லவும் முடியும். முடிந்தால் தேர்தலை சந்திக்க தயாராகுமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ச மொட்டுக்கட்சி கூட்டத்தில் சவால் விடுத்தார். அந்த சவாலை நாம் ஏற்கின்றோம்.

நாமும் எதற்கும் தயாராகவே இருக்கின்றோம். எங்களுக்கும் வீதியில் இறங்கத் தெரியும். பாதயாத்திரை நடத்தவும் முடியும்.

எனவே, தோல்விப் பயத்தில் ஒத்திவைத்த உள்ளூராட்சிமன்றத் தேர்தலை நடத்துமாறு பிரதமருக்கு நாம் சவால் விடுக்கின்றோம்.

அப்போது மக்கள் யார் பக்கம் என்பது தெரியவரும். அடுத்த மாதம் நாமும் கூட்டம் நடத்துவோம். அப்போது மக்கள் சக்தி யாருக்கு என்பதும் தெரியவரும் - என்றார். (ஒ-44)

# தேர்தலுக்கான அறிவிப்பு உரிய நேரத்தில் வரும்

## அரசாங்கம் தெரிவிப்பு

கொழும்பு, பெப். 11

உரிய நேரத்தில் தேர்தலுக்கான அறிவிப்பு விடுக்கப்படும். எனவே, அதனை எதிர்கொள்ளத் தயாராகவே இருங்கள் என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்களுக்கு, ஆளுங்கட்சி பிரதம கொறடாவான அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

நாடாளுமன்றம் நேற்று முற்பகல் 10 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியது.

இதன்போது, கொரோனாவை காரணம்காட்டி உள்ளூராட்சிசபைத் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டது. ஆனால் இன்று பொதுஜன பெரமுன கட்சி பரப்புரைக் கூட்டம் நடத்துகின்றது. எனவே, உள்ளூராட்சித் தேர்தல் விரைவில் நடத்தப்பட வேண்டும் - என ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்தியது.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, தேர்தல்களை எதிர்கொள்ள ராஜபக்சக்கள் ஒருபோதும் அஞ்சியது கிடையாது. முன்கூட்டியே தேர்தலை நடத்தி வீட்டுக்கு சென்ற தலைவர்கள் அவர்கள். எனவே, எந்நேரத்திலும் தேர்தலை எதிர்கொள்ள நாமும் தயார். உரிய நேரத்தில் அதற்கான அறிவிப்பு வெளியாகும்.

தயாராகவே இருங்கள். அதேபோல தேர்தல் நடத்தப்பட்டால் அதில் எமக்கு வெற்றி உறுதி என்பதையும் கூறிவைக்க விரும்புகின்றேன்- என்றார். (ஒ-44)

# 60 பவுண் நகைகளுடன் சேலைகளும் திருட்டு

யாழ்ப்பாணம்,பெப்.11

வீட்டில் ஆள்களில்லாத சமயத்தில் புகுந்த திருடர்கள், அங்கிருந்த 60 பவுண் தங்க நகைகள் மற்றும் விலை உயர்ந்த சேலைகளைத் திருடிச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கோண்டாவில் பகுதியில் நேற்று முன்தினம் நடந்துள்ளது.

சுவிஸிலிருந்து வருகை தந்த குடும்பத்தினர், கோண்டாவிலிலுள்ள உறவினர் வீட்டில் தங்கியிருந்துள்ளனர். அவர்கள் அனைவரும் நேற்று முன்தினம் காலையில் வீட்டிலிருந்து வெளியில் சென்றுள்ளனர்.

இதன்போது தங்கநகைகள் மற்றும் உடுபுடைவைகளை அலுமாரிக்குள் வைத்து விட்டுச் சென்றுள்ளனர். மாலையில் வீடு திரும்பிய போது, அலுமாரியிலிருந்து பொருள்கள் சிதறப்பட்டுக் கிடந்துள்ளன. அதன்போதே திருட்டு இடம்பெற்றதை அறிந்தனர். இது தொடர்பில் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஒ-4,இ)



# சுகாதாரத் தொழிற்சங்கங்கள் வவுனியாவில் ஆர்ப்பாட்டம்

கொழும்பு,பெப்.11

சம்பளப் பிரச்சினை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து, சுகாதாரத் தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள் ஒன்றிணைந்து வவுனியாவில் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நாடளாவிய ரீதியில் தாதியர்கள், பொதுச் சுகாதார பரிசோதகர்கள் உள்ளிட்ட 16 தொழிற்சங்கங்களைச் சேர்ந்தோர் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து கடந்த திங்கட்கிழமை முதல் பணிபுறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதற்கு ஆதரவு தெரிவித்து வவுனியா மருத்துவமனைக்கு முன்பாக, 16 தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (ஒ-4,18)




**கம்பஸில கிட்டடியில ஒரு பிரச்சினை நடந்தது. அங்க இரண்டாம் வருடத்தில படிக்கிற ஒருத்தர், கம்பஸில படிக்காத இன்னொருத்தரையும் உள்ளுக்க கூட்டிக் கொண்டு வந்திருக்கிறார். அதுவும் அரைக்காற்சட்டையோட. அப்பிடி கம்பஸுக்க அரைக்காற்சட்டையோட வரக்கூடாது எண்டது கம்பஸ் நடைமுறையளில ஒண்டு. அதால சீனியர்மார் அந்தப் பெடியனை வெளில போகச் சொல்லிட்டாங்கள். பிறகு இந்தக் கறுவியத்தில, தன்னை வெளியில போகச் சொன்ன சீனியரை ஆளைவிட்டு அந்தப் பெடியன் அடிப்பிச்சதெண்டு சந்தேகம். இப்ப பிரச்சினை அதில்லை.இந்தப் பிரச்சினைக்கு மூலகாரணமே, கம்பஸ் நடைமுறைக்கு பிழையா அந்தப் பெடியனும், அவரின்ர சிநேகிதனும் அரைக்காற்சட்டையோட கம்பஸுக்குள்ள வந்ததுதான். அந்த ரண்டு பேரும் மேல இருந்து பரசூட்டில உள்ளுக்க குதிக்கேலை, மெயின் வாசலால தான் வந்தவை. அப்பிடி வரேக்க, எப்பிடி அவையை செக்கியூரிட்டிமார் உள்ளுக்க விட்டவை? அவை வாசலிலையே மறிச்சு அனுப்பியிருந்தா இப்பிடி ஜூனியர், சீனியர் சண்டை வந்திருக்காதே.**

**இந்த கம்பஸ்செக்கியூரிட்டிக்காரர் பொதுவா தங்கட கடமையில கடும் இறுக்கம். அதிலையும் மாவீரர் நாள் , திலீபன் நினைவுநாள், முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நாள் எண்டால் இன்னும் கண்ணை வடிவாத் திறந்து ஆர் தீபமேத்தப் போயினம் எண்டு பார்த்து, அதைத் தடுக்கிறதிலை விண்ணர். அவ்வளவு ஏன், இந்தமுறை கார்த்திகை விளக்கீட்டுக்கு தீபமேத்தப் போன கம்பஸ் பெடியளைக் கூட உள்ளுக்க விடாமல் திருப்பி அனுப்பிற அளவுக்கு கடமையில கண்ணாயிருப்பினம். சுதந்திர தினமண்டைக்கு கூட, சைக்கிள் விடப் போன கம்பஸ் பெடியளைக் கூட உள்ளுக்க விடமாட்டம் எண்டு வீம்பு பிடிச்சு, பிறகு கனநேரத்துக்கு பிறகுதான் உள்ளுக்க விட்டவை. இப்பிடி மாணவர்கள் ஏதும் போராட்டம், நிகழ்வு செய்யிறதெண்டால் மட்டும் அதை எப்பிடி தடுக்கலாம் எண்டு அக்கறையா இருக்கிற, கம்பஸ் செக்கியூரிட்டிமார், இப்பிடி கம்பஸ் ரூல்ஸை மீறி வாற ஆக்களை வாசலோட திருப்பி விட ஏன் பஞ்சிப்படுகினம் எண்டு மாணவர்கள் கேக்கினம்.**

**எதைச் செய்யவேணுமோ அதைச் செய்யாமல், எதைச் செய்யக் கூடாதோ அதையெல்லோ ஒழுங்காச் செய்யினம் எண்டு செக்கியூரிட்டிமாரைப் பார்த்து , கம்பஸ் பெடியள் தங்களுக்க நக்கலாவும் கதைக்கினம். யாழ்ப்பாணக் கம்பஸ் இவ்வளவு பிரச்சினைக்கு மத்தியிலும், ஒழுக்கத்தோடையும், பெரிய பிரச்சினையள் வராமலும் இருக்க அப்ப இருந்த செக்கியூரிட்டிமாரின்ர அர்ப்பணிப்பான சேவையும், கம்பஸ் பெடியளோட அவை வைச்சிருந்த சிநேகபூர்வமான உறவும் முக்கியமான காரணம். அதை மாதிரி இப்பவும் கம்பஸ் பெடியளை ஏதோ எதிரியைப் பாக்கிறமாதிரிப் பாக்காமல், நட்பா பார்த்து. ரூல்ஸை மீறுற விசயங்களை முளையிலேயே கிள்ளியெறிஞ்சு, உண்மையான கம்பஸ்காவலர்களா மாறுவினமோ? மாறினால் நல்லம் தான்.**



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொரோனாத் தடுப்பூசி அட்டை இராணுவத்தினரால் சோதனை

**கொழும்பு, பெப். 11**
**மட்டக்களப்பில் கொரோனாத் தடுப்பூசி அட்டை, பொலிஸ் மற்றும் இராணுவத்தினரால் பல இடங்களிலும் பரிசோதிக்கப்பட்டு வருகின்றது.**

கொரோனாப் பெருந்தொற்றுக்கு எதிராகப் பூஸ்டர் டோஸைச் செலுத்திக்கொள்ளுமாறு சுகாதாரத்துறை மீண்டும் மீண்டும் வலியுறுத்தி வருகின்றது. எனினும், மக்களிடையே பூஸ்டர் டோஸைச் செலுத்திக் கொள்வதற்கான ஆர்வம் மிகக் குறைந்தளவே உள்ளது. இந்த நிலையிலேயே தடுப்பூசி அட்டைகள் பொலிஸாராலும் இராணுவத்தினராலும் சோதிக்கப்படுகின்றன. (ம)




## தொற்றிலிருந்து மீண்டார் சபாநாயகர்

கொழும்பு, பெப்.11
கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டிருந்த சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தனிமைப்படுத்தல் காலத்தை முடித்து நாடாளுமன்றத்துக்கு நேற்று திரும்பினார்அண்மையில் கொரோனாத் தொற்றுக்குள்ளான சபாநாயகர் கொழும்பு தொற்று நோய் மையத்தில் சேர்க்கப்பட்டார். பின்னர் தெஹிவளையில் உள்ள அவரது வீட்டில் தனிமைப்படுத்தப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (வ-இ)

## கொரோனாத் தொற்று 35 வீதத்தால் அதிகரிப்பு

கொழும்பு,பெப்.11
நாட்டில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 35 வீதத்தால் அதிகரித்துள்ளது என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.
இது தொடர்பில் கொரோனாத் தொற்று கட்டுப்பாட்டுப்பிரிவின் தேசிய ஒருங்கிணைப்பு நிபுணர், மருத்துவர் அன்வர் ஹம்தானி தெரிவிக்கையில், நாட்டில் கடந்த வாரத்துடன் ஒப்பிடுகையில், கொரோனாத் தொற்றால் ஏற்படும் இறப்புக்களின் எண்ணிக்கையும் 15 வீதத்தால் அதிகரித்துள்ளது. எனவே மக்கள் பூஸ்டர் தடுப்பூசியைத் துரிதமாக பெற்றுக்கொள்ள வேண்டும். இதுவரை ஒரு தடுப்பூசியையேனும் பெற்றுக்கொள்ளாத 11 லட்சத்துக்கும் அதிகமானோருக்காக நடமாடும் தடுப்பூசித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பொது இடங்கள் மற்றும் வழிபாட்டுத் தலங்களை அண்டிய பகுதிகளிலும் தடுப்பூசி மையங்கள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன-என்றார். (ஒ-4இ)



## காற்றாலை மின் உற்பத்தி மக்களுக்கு விழிப்புணர்வு

மன்னார்,பெப்.11
மன்னாரில் இரண்டாம் கட்ட காற்றாலை மின் உற்பத்தி விரிவாக்கத்தை மேற்கொள்ளுவது தொடர்பான, விழிப்புணர்வு நடவடிக்கைகள், கொழும்பிலிருந்து வருகைதரும் உயர் மட்டக் குழுவினரால் முன்னெடுக்கப்படவுள்ளன.
இலங்கையில் 70 வீதமான மின் உற்பத்தி, சூரிய சக்தி, காற்றாலை மற்றும் நீர் மின் உற்பத்திகளூடாகப் பெறவேண்டும் என்பது அரசின் திட்டமாக உள்ளது.
இதன் ஒரு கட்டமாக மன்னாரில் 36 மின் காற்றாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. இதனால் மன்னார் தீவுப் பகுதியிலுள்ள மீனவர்களுக்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இது தொடர்பில் மன்னார் பிரஜைகள் குழுவினர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டு சென்றனர்.
தொடர்ந்து இரண்டாம் கட்டமாக இரண்டாம் காற்றாலை மின் உற்பத்தி விரிவாக்கத் திட்டம் முன்னெடுப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதற்கு மக்களுடன் இணைந்து மன்னார் பிரஜைகள் குழுவினரும் எதிர்ப்புத் தெரிவித்தனர்.
இந்த நிலையில் ஜனாதிபதியின் மன்னார் விஜயத்தை அடுத்து, அவரது பணிப்பில் இரண்டாம் கட்ட காற்றாலை மின் உற்பத்திக்கான முன்னெடுப்புக்கள் மேற்கொள்ளப்படவுள்ளன. அதற்கமைவாக இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகார சபையின் ஏற்பாட்டில், மன்னாருக்கு நாளை வருகை தரும் உயர்மட்டக்குழுவினர், இரு நாள்கள் மன்னாரில் தங்கியிருந்து, மன்னாரிலுள்ள முக்கிய குழுவினரைச் சந்தித்து விழிப்புணர்வுகளை முன்னெடுக்கவுள்ளனர். மன்னார்பிரஜைகள்குழு ஆளுநர் சபையினர், மன்னார் மாவட்ட மீனவ அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் பனம்பொருள் கூட்டுறவுச் சங்கங்களின் பிரதிநிதிகள் ஆகியோரை அவர்கள் சந்திக்கவுள்ளனர். (ஒ-4,60)



இலுப்பைக்கடவையில்

## அட்டைப்பண்ணை அமைக்க எதிர்ப்பு

மன்னார்,பெப்.11
மன்னார் - மாந்தைமேற்கு இலுப்பக்கடவை கடற்பகுதியில் அட்டைப் பண்ணை அமைப்பதற்கு மக்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.
இது தொடர்பான கலந்துரையாடல், மாந்தை மேற்குப் பிரதேச செயலர் தலைமையில், இலுப்பைக்கடவை மீனவர் சங்கக் கட்டடத்தில் நேற்று இடம்பெற்றது.
அதில் அட்டைப் பண்ணை அமைக்கப்படுவதால் கிடைக்கும் நன்மைகள் தொடர்பாக, நைட்டா அதிகாரிகளால் பொதுமக்களுக்குத் தெளிவுபடுத்தப்பட்டது. எனினும் மக்கள் அதை ஏற்றுக்கொள்ளவில்லை.
கரையோரங்களில் மீனவப் பெண்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படும். எதிர்கால சந்ததியினருக்கான காணிகள் இல்லாமற்போகும் போன்ற காரணங்களை முன்வைத்து, எதிர்ப்பை வெளியிட்டனர். கலந்துரையாடலில் தேசிய நீரியல் வள அதிகாரிகள், இலுப்பைக் கடவை கிராம அலுவலர் மற்றும் மீனவ சங்க உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். (ஒ-4,213)

5,000 ரூபா கோரி

## முன்பள்ளி ஆசிரியர்கள் தொடர்ந்து போராட்டம்

மன்னார்,பெப்.11
அரச ஊழியர்களுக்கு வழங்கப்படும் 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு தங்களுக்கும் வழங்கப்பட வேண்டும் என்று கோரி, மன்னார் மாவட்ட முன்பள்ளி ஆசிரியர்கள் தொடர் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.
மன்னார் மாவட்ட முன்பள்ளி ஆசிரியர் சங்கம் இது தொடர்பில், வடக்கு மாகாண ஆளுநருக்கு அண்மையில் கடிதம் அனுப்பியது.
கடந்த 5 தொடக்கம் 25 வருடங்களுக்கு மேலாக முன்பள்ளி ஆசிரியர்களாகப் பணியாற்றும் எமக்கு 6 ஆயிரம் ரூபா வழங்கப்படுகின்றது. எனினும் முன்பள்ளி ஆசிரியர்கள் பலர் பெண் தலைமைத்துவம் கொண்டவர்கள். பலர் பொருண்மியம் நலிந்தவர்கள். எனவே அரசால் வழங்கப்படும் மேலதிகக் கொடுப்பனவான 5 ஆயிரம் ரூபாவை, எங்களது மாதாந்த ஊக்கவிப்புக் கொடுப்பனவுடன் சேர்த்து வழங்க ஆவன செய்யவேண்டும் என்று தமது கடிதத்தில் குறிப்பிட்டனர்.
இது தொடர்பாக ஆளுநர் அலுவலகம், வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளருக்கு தெரிவித்துள்ள போதும், இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அதனால் மன்னார் மாவட்ட முன்பள்ளி ஆசிரியர்கள் நேற்று முன்தினம் கவனவீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர். இந்த நிலையில், தீர்வு கிடைக்கும் வரை காலவரையறையின்றி போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக அவர்கள் அறிவித்துள்ளனர். (ஒ-4,60)

கொரோனாத் தொற்று

## தனிமைப்படுத்தல் காலம் ஏழு நாள்களாக குறைப்பு

கொழும்பு,பெப்.11
கொரோனாத் தொற்றுக்குள்ளானோருக்கான தனிமைப்படுத்தல் காலம் 7 நாள்களாகக் குறைக்கப்பட்டுள்ளது என்று பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட மருத்துவ நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,
தற்போது எந்தவித தொற்று அறிகுறிகளும் அற்ற , உடலில் மிகக் குறைவான வைரஸ் காணப்படும் தொற்றாளர்களே பெருமளவில் உள்ளனர். எனவே தொற்றுக்குள்ளானோருடன் தொடர்புகளைப் பேணியவர்கள் முழுமையாக தடுப்பூசியைப் பெற்றிருப்பார்களாயின், அவர்கள் தனிமைப்படுத்தலுக்கு உட்படத் தேவையில்லை.
கொரோனாத் தொற்று முதன் முதலாக இனங்காணப்பட்ட போது, அது எத்தனை நாள்களுக்கு மனித உடலில் தங்கும் என்று தெரியாது. எனவே தான் 14 நாள்கள் தனிமைப்படுத்தல் காலமாகக் குறிப்பிடப்பட்டது. எனினும் தற்போது ஒமிக்ரோன் பரவல் காணப்படுகின்ற போதிலும் , தொற்றாளர்களிடம் வைரஸ் வீதம் மிகக் குறைவாகவே காணப்படுகின்றது.
இலங்கையில் மாத்திரமின்றி சர்வதேச மட்டத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட ஆய்வுத் தரவுகளின் அடிப்படையில் தற்போது 7 நாள்கள் தனிமைப்படுத்தல் காலம் போதுமானதாகக் கண்டறியப்பட்டுள்ளது. முழுமையாக தடுப்பூசி பெற்றவர்கள் தொற்றுக்கு உள்ளாகும் வீதமும், ஏனையோருக்கு தொற்றைப் பரப்பும் வீதமும் மிகக் குறைவாகும்- என்றார். (ஒ-4,இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீனவர் பிரச்சினையில்
# இந்தியாவின் கோரிக்கைக்கு செவிசாய்த்த மக்கள் முன்னணி

**யாழ்ப்பாணம், பெப். 11**

**மீனவர் பிரச்சினை தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும் என்ற இந்தியத் தூதரக அதிகாரிகளின் வாய்மூல உத்தரவாதத்துக்கு அமைவாக, நாடாளுமன்றத்தில் முன்வைக்கவிருந்த சபை ஒத்திவைப்புப் பிரேரணையிலிருந்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பின்வாங்கிக் கொண்டுள்ளது.**

இது தொடர்பில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயலர் செ.கஜேந்திரன் அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:

வடபகுதி மீனவர்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை ஒத்திவைப்புவேளை பிரேரணை விவாதத்துக்கு கொண்டு வரப்படும் வகையில் நாடாளுமன்றில் அறிவித்தல் பலகையில் காட்சிப்படுத்தப் பட்டிருந்தது.

இந்த நிலையில், நேற்றுமுன்தினம் நண்பகல் கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்திலிருந்து அதிகாரி ஒருவர் தொடர்புகொண்டு, எம்மால் முன்னெடுக்கப்படவிருந்த விவாதம் தொடர்பில் கலந்துரையாடினார். அதன்போது நாம், எமது வடபகுதி மீனவர்களது கடற்றொழிலுக்கு ஏற்படும் பாதிப்புக்கள் தொடர்பில், இலங்கைக் கடற்படை நடவடிக்கை எடுக்காது எமது வடபகுதி மீனவர்களுக்கும் எல்லை தாண்டி வரும் மீனவர்களுக்கும் இடையில் மோதலை தீவிரப்படுத்தி பகைமையை வளர்க்கும் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளமை தொடர்பில் சபையின் கவனத்தை ஈர்க்கும் நோக்குடன் நாம் குறித்த விவாதத்தை ஏற்பாடு செய்துள்ளோம் என்பதை தெரிவித்தோம்.

அதன்போது, தூதரக அதிகாரி, இந்தப் பிரச்சினை தொடர்பில் தமது தரப்பிலிருந்தும் தாம் அக்கறை செலுத்துவதாகவும், மேற்படி மீனவர் பிரச்சினையானது யாழ்ப்பாணத்திலும், தமிழகத்திலும் ஒரு நெருக்கடி மிகுந்த சிக்கல் நிலைக்கு வந்துள்ளதாகவும், அந்த நெருக்கடி நிலையைத் தாம் புரிந்து கொண்டுள்ளதாகவும், அந்த வகையில் இந்தப் பிரச்சினையை கட்டுப்படுத்துவதற்குத் தாம் முடிவெடுத்துள்ளதாகவும், தாம் மேற்கொள்ளவுள்ள நடவடிக்கைகளுக்கு வாய்ப்பளிக்கும் முகமாக குறித்த விடயத்தை நாடாளுமன்றத்தில் விவாதிப்பதனை தவிர்த்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொண்டார்கள்.

அவர்களது வேண்டுகோளுக்கு இணங்க மீனவர்களது பிரச்சினையை தீர்ப்பதற்கான அவர்களது முயற்சிக்கு ஒத்துழைக்கும் வகையில் குறித்த பிரேரணையை விவாதத்துக்கு எடுப்பதனைத் தவிர்த்துக் கொண்டுள்ளோம்- என்றுள்ளது. (ஏ-5)

## மின் கட்டணத்தை அதிகரிக்க திட்டம்

கொழும்பு, பெப். 11

மின் கட்டணத்தை அதிகரிக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகின்றது என்று இலங்கை மின்சார சபையின் கூட்டு தொழிற்சங்க முன்னணியின் ஒருங்கிணைப்பாளர் ரஞ்சன் ஜெயலால் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

மின்சாரக் கட்டணத்தை அதிகரிப்பதன் மூலமே இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணமுடியும். இன்று அதிகளவு மின்சாரம் எரிபொருளில் உற்பத்தி செய்யப்படுகிறது. இதனால், எரிபொருள் மற்றும் மின்சாரக் கட்டணங்கள் வெகுவிரைவில் கணிசமான அளவு அதிகரிக்கப்படும் - என்றார். (ம)

## சிறுமி மீது வன்புணர்வு
### இருவர் கைது



கொழும்பு, பெப். 11

14 வயதுச் சிறுமியொருவரை வன்புணர்ந்த குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பதுளை, ஹாலிஎல பிரதேசத்தில் இந்தச் சம்பவம் நடந்துள்ளது.

சிறுமி தனக்கு வயிற்றுவலி இருப்பதாக தனது தாயிடம் கூறியதை யடுத்து, ஹாலிஎல பிரதேசத்தில் உள்ள மருத்துவமனைக்குச் சென்று பரிசோதித்த போது சிறுமி நான்கு மாதக் கர்ப்பிணியாக இருந்தமை தெரியவந்துள்ளது.

சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் முறையே 41, 39 வயதுடையவர்கள்.

சந்தேகநபர்களும் சிறுமியின் தாயாரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். (ம)



## விலங்குகளின் பாதுகாப்பு: வெளியானது சட்ட வரைவு

கொழும்பு, பெப்.11

விலங்குகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நோக்கில் அரசாங்கம் ஒரு புதிய சட்டத்தை கொண்டுவரவுள்ளது. இதற்கமைவாக விவசாய அமைச்சின் பணிப்புரைக்கமைய விலங்கின நலம் பேணல் என்ற புதிய சட்ட வரைவு வர்த்தமானியில் பிரசுரமாகியுள்ளது.

புதிய சட்டத்தின்படி, விலங்குகளை சித்திரவதைக்குட்படுத்துவது, வேலைக்குத் தகுதியற்ற விலங்கை வேலைக்குப் பயன்படுத்தல் என்பன தடைசெய்யப்படும். விலங்கின் நலனுக்கு கேடு விளைவிக்கும் வகையில் பயிற்சியளித்தல், தீங்கு விளைவிக்கும் மருந்து அல்லது பொருளை வழங்குவது போன்றவையும் குற்றங்களாக கருதப்படும். விதிகளுக்கு முரணாகச் செயற்படும் நபருக்கு எதிராக, நீதிமன்ற விசாரணையின் பின் குற்றம் நிரூபிக்கப்பட்டால், அவருக்கு 70 ஆயிரம் ரூபா அல்லது இரண்டு வருடங்களுக்கு குறையாமல் சிறைத்தண்டனை அல்லது இரண்டும் விதிக்கப்படும்.

மேலும் எந்தவொரு மிருகத்தையும் கொடூரமான முறையில் கொன்றமை நிரூபிக்கப்பட்டால் ஒரு லட்சத்து 25 ஆயிரம் ரூபாவுக்கு விஞ்சாத அபராதம் அல்லது 3 ஆண்டுகளுக்கு விஞ்சாத சிறைத்தண்டனை அல்லது இரண்டும் விதிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-இ)

## உயர்தரப் பரீட்சையில் மாணவர்களுக்கு அநீதி
### கல்வி அலுவலகத்தில் முறைப்பாடு

கொழும்பு, பெப். 11

க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் கலைப்பாடம் தொடர்பான வினாத்தாள்கள் கையளிக்கும் வேளையில் இரண்டு பரீட்சை நிலையங்களின் மாணவர்கள் சிலர் அநீதிக்கு உள்ளாகியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

பத்தேகம கிறிஸ்தவ ஆண்கள் கல்லூரியின் பரீட்சை நிலையத்திலும் கம்பஹா தக்ஷிலா கல்லூரியின் பரீட்சை நிலையத்திலும் இது தொடர்பான சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. பத்தேகம கிறிஸ்தவ ஆண்கள் கல்லூரி பரீட்சை நிலையத்தைச் சேர்ந்த ஆறு மாணவர்களிடமிருந்து குறித்த நேரத்துக்கு முன்னதாக விடைத்தாள்கள் பெற்றுக்கொள்ளப்பட்டன என்றும், கம்பஹா தக்ஷிலா கல்லூரி பரீட்சை நிலையத்தின் இரண்டு மாணவர்களுக்கு கலை வினாத்தாளின் இரண்டாம் பாகம் வழங்கப்படவில்லை என்றும் முறையிடப்பட்டுள்ளது. (ம)

## மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு எதிராக நாடாளுமன்றத்தில் தீர்மானம்!
### தயாசிறி வலியுறுத்து

கொழும்பு, பெப். 11

உள்ளகரீதியில் முன்னெடுத்த வேலைத்திட்டங்களைகூட இன்று ஏற்றுக்கொள்ள மனித உரிமைகள் ஆணைக்குழு தயாராக இல்லையென்றால், மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு எதிராக நாடாளுமன்றத்தில் தீர்மானம் ஒன்றினை எடுத்து, அதனை சர்வதேசத்துக்கு வெளிப்படுத்த வேண்டும் என இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் விதமாக ஜெனீவா விவகாரங்கள் மீண்டும் தலைதூக்கியுள்ளன. பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா உள்ளிட்ட இந்த நாட்டை காப்பாற்றிய 39 இராணுவ அதிகாரிகளுக்கு உலகில் பல்வேறு நாடுகளுக்கு செல்ல முடியாத நிலைமையொன்று ஏற்பட்டுள்ளது.

எனினும் இந்த 39 பேரும் மேன்முறையீடு செய்வதற்கான உரிமையினை ஏன் நாம் இன்னமும் பெற்றுக்கொள்ளவில்லை.

குற்றங்கள் இடம்பெற்றதா என்பதை ஆராய பல்வேறு ஆணைக்குழுக்கள் இலங்கையில் நிறுவப்பட்டன. அவற்றின் அறிக்கைகளை மனித உரிமைகள் பேரவையில் ஏற்றுக்கொள்ளும் நிலையொன்று காணப்படவில்லை. மனித உரிமைகள் பேரவையின் அடிப்படை விசாரணை அதிகாரத்தை கேள்வி கேட்க வேண்டியது அவசியமானதாக மாறியுள்ளது.

இலங்கை விடயத்தில் தலையிட ஏன் மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு இடம்கொடுக்கின்றோம். ஆகவே இந்த விடயங்களில் நாம் தலையிட வேண்டும்.

மனித உரிமைகள் ஆணைக்குழு இல்லாத அதிகாரத்தை பயன்படுத்தி தலையிடுவதால் எமது இராணுவத்துக்கு அநீதி இழைக்கப்படுகின்றது - என்றார். (ம)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

### ஈஸ்டர் தாக்குதல் விவகாரம்:

# சர்வதேச விசாரணைகள் நீதியைப் பெறுவதற்கே!

## நாட்டைக் காட்டிக்கொடுப்பதாக அர்த்தமல்ல

## அருட்தந்தை காமினி அடிகள் தெரிவிப்பு

**கொழும்பு, பெப். 11**

**உயிர்த்த ஞாயிறுதின தாக்குதல் சம்பவம் தொடர்பில் சர்வதேசத்தின் ஆதரவைப் பெறுவதானது, நாட்டைக் காட்டிக்கொடுக்கும் முயற்சி அல்ல. பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுப்பதற்காகவே சர்வதேசத்தின் ஆதரவை பெறுவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறோம் என்று கொழும்பு மறை மாவட்ட அருட்தந்தை சிறில் காமினி அடிகளார் தெரிவித்தார்.**

கொழும்பு ஊடகமொன்றுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே காமினி அடிகளார் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்:

இலங்கை கத்தோலிக்க திருச்சபை எதிர்க்கட்சிகளின் அரசியல் நிகழ்ச்சி நிரலின் படி செயற்படுவதாகக் கூறப்படுவதை முழுமையாக மறுக்கின்றோம். கொழும்பு மறை மாவட்ட பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை உயிர்த்த ஞாயிறுதின குண்டுத் தாக்குதல் சம்பவம் குறித்து பாப்பரசருக்கு கடிதமொன்றை அனுப்பியிருந்தார். இதற்கு பதில் கடிதம் அனுப்பியிருந்த பாப்பரசர் பிரான்சிஸ் ஆண்டகை இந்த விடயம் தொடர்பில் தாம் முழுமையான ஆதரவை வழங்குவதாக அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தின குண்டுத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்று மூன்று ஆண்டுகள் ஆகப்போகின்றன. இருப்பினும் இதுவரை சூத்திரதாரி யார் எனக் கண்டறியப்படவில்லை. இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்டு வரும்விசாரணைகள்குறித்து கத்தோலிக்க திருச்சபை அதிருப்தியில் உள்ளது.

இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் விசாரிப்பதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் பரிந்துரைகளை முழுமையாக நடைமுறைப்படுத்துவதை கத்தோலிக்க திருச்சபை விரும்புகிறது. இந்தத் தாக்குதல் சம்பவத்தில் மாபெரும் சூழ்ச்சி நடைபெற்றுள்ளதாக அப்போதைய சட்டமா அதிபர் தப்புள டிலிவேரா தெரிவித்திருந்தார். தப்புள டிலிவேரா வெளியிட்ட இந்தக் கருத்து தொடர்பில் அவரிடம் விசாரணை நடத்த வேண்டும். உயிர்த்த ஞாயிறுதின தாக்குதல் சம்பவத்துக்கு அரசாங்கம் நீதியைப் பெற்றுக்கொடுப்பதற்குத் தவறினால், சர்வதேச நீதிமன்றத்தைநாடுவதற்கு இலங்கை கத்தோலிக்க திருச்சபை தயாராகவே உள்ளது.

சர்வேதசத்தின் ஆதரவைப் பெறுவதென்பதை நாட்டைக் காட்டிக் கொடுக்கும் முயற்சியாகக் கருதாமல், பாதிக்கப்பட்ட மக்களுக்குஆதரவளிக்க வேண்டும் என்று கருதிக்கொள்ள வேண்டும். பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டும். குற்றஞ்செய்த வர்களுக்கு தண்டனை வழங்கப்பட வேண்டும். யார் ஆட்சியில் இருந்தாலும் நீதிக்காக தொடர்ந்து போராடுவோம் - என்றார். (ம)

## நகை,கோழி திருட்டு சந்தேகநபர் கைது


யாழ்ப்பாணம்,பெப்.11

நகை மற்றும் கோழியைத் திருடினார் என்ற குற்றச்சாட்டில் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஊர்காவற்றுறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சுருவில் மாதா கோவிலடி பகுதியில், 48 ஆயிரம் ரூபா பெறுமதியான நகை மற்றும் ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான கோழி என்பன நேற்றுமுன்தினம் திருடப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பில் ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளில், அதே கிராமத்தைச் சேர்ந்த 21 வயதுடைய நபரை பொலிஸார் கைது செய்தனர். திருடப்பட்ட பொருள்களும் கைப்பற்றப்பட்டன. சந்தேகநபர் ஊர்காவற்துறை நீதிமன்றில் முற்படுத்தப்படுவர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஒ-4-27)



## எரிவாயு அடுப்பு வெடிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.11

வீட்டில் மதிய நேர உணவு தயாரித்துக் கொண்டிருந்த போது, எரிவாயு அடுப்பு வெடித்துள்ளது.

இந்தச் சம்பவம் ஊர்காவற்றுறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காரைநகர் செம்பாடு பகுதியில் நேற்றுப் பதிவாகியுள்ளது.

சம்பவத்தால் சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை. சம்பவ இடத்துக்கு விரைந்த ஊர்காவற்றுறைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டனர். (ஒ-4-125)

## கடன் விவரங்கள் தொடர்பில் மாதாந்தம் அறிக்கை தருக!

### ரணில் வலியுறுத்து

கொழும்பு, பெப். 11

அரச கடன் மற்றும் அந்நியச் செலாவணிக் கையிருப்பு தொடர்பில் மாதாந்தம் நாடாளுமன்றத்துக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, சபையில் நேற்று கோரிக்கை விடுத்தார்.

நாடாளுமன்றம் நேற்று முற்பகல் 10 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியது. இதன்போது இது தொடர்பில் கருத்து வெளியிட்ட ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்ததாவது:

'அரசமைப்பின் 148 ஆவது சரத்தின் பிரகாரம் அரச நிதி அதிகாரம் நாடாளுமன்றத்துக்கே இருக்கின்றது. எனினும், நாம் தகவல்களை கோரியிருந்தாலும் அவை இன்னும் கிடைக்கப்பெறவில்லை. எனவே, மாதாந்தம் நாடாளுமன்ற அமர்வு ஆரம்பமாகும் முதல் வாரத்திலேயே அரச கடன் மற்றும் கடன் சேவைகள் தொடர்பில் அறிக்கையொன்றை முன்வைக்குமாறு அரச கணக்குகள்பற்றி குழுவிடம் கோரிக்கை விடுக்கின்றேன். அப்போது அதுபற்றி விவாதிக்க முடியும். நிதி விவகாரத்தில் நிலையான தன்மையை அதன்மூலம் பேணமுடியும்.

அத்துடன், அந்நியச் செலாவணிக் கையிருப்பு தொடர்பில் இன்று உரிய தகவல் வழங்கப்படுவதில்லை. கடன் பத்திரங்களும் அதில் உள்வாங்கப்பட்டுள்ளன. எனவே, சரியான தகவல்கள் அவசியம். தற்போது கிடைக்கும் தகவல்களின்படி ஒரு பில்லியன் டொலருக்கும் குறைவான அந்நியச் செலாவணிக் கையிருப்பே இருப்பதாக கதை அடிபடுகின்றது. எனவே, மாதாந்தம் அறிக்கை முன்வைத்தால் உண்மைத் தன்மையை அறியக்கூடியதாக இருக்கும்' - என்றார். (ம-44)

## பிற்போடப்பட்டது சிலை திறப்பு விழா

யாழ்ப்பாணம், பெப்.11

காங்கேசன்துறை மக்கள் கலைஞர் அமைப்பினரால் அமைக்கப்பட்ட கலாநிதி நடிகமணி வி.வி.வைரமுத்துவின் சிலை திறப்புவிழா பிற்போடப்பட்டுள்ளது. சிலை திறப்பு விழா காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி சந்தியில் இன்று வெள்ளிக்கிழமை நடைபெறுவதாக ஏற்பாட்டுக்குழுவால் முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் கால நிலை மாற்றம் காரணமாக குறித்த நிகழ்வு பிற்போடப்பட்டுள்ளது எனவும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் எனவும் ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (வ-7)

## சேதனப்பசளை உற்பத்தி கட்டடம் 'கோமா' நிலையில்!

முல்லைத்தீவு,பெப்.11

விசுவமடு மேற்குப் பகுதியில் சேதனப்பசளை உற்பத்திக்காகக் கட்டப்பட்ட கட்டடம் பயன்பாடற்றுள்ளது. நஞ்சற்ற உணவைப் பயன்படுத்தும் நோக்கில், 2014 ஆம் ஆண்டு ஜப்பானிய மக்களின் நிதி உதவியுடன் இந்தக் கட்டடம் அமைக்கப்பட்டது.

தற்போது நாட்டில் சேதன உரத்துக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டு வரும் நிலையில், இந்தக் கட்டடத்தை மீளப்பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஒ-4-113)





## கடைத்தொகுதிக்கு அடிக்கல் நடுகை

பருத்தித்துறை, பெப்.11

பருத்தித்துறை, கிராமக்கோட்டுச் சந்திக்கு அருகாமையிலுள்ள பருத்தித்துறை பிரதேசசபைக்குரிய காணியில் கடைத்தொகுதி அமைக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்தக் கடைத்தொகுதிக்கான அடிக்கல்லை பருத்தித்துறை பிரதேசசபையின் தவிசாளர் அ.சா.அரியகுமார் நடுகை செய்தார். பிரதேச அபிவிருத்தி உதவித் திட்டத்தின் கீழ் 10.85 மில்லியன் ரூபா செலவில் கடைத் தொகுதி அமைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

நாளொரு நல்வார்த்தை

"இயற்கையை ஆழ்ந்து நோக்குங்கள். பிறகு எல்லாவற்றையுமே நீங்கள் சிறப்பாகப் புரிந்து கொள்வீர்கள்."
ஆல்பேர்ட் ஐன்ஸ்டீன்

## கொரோனாவுடன் வாழ்தலென்பது...!

நாட்டில் கொரோனாப் பெருந்தொற்று தீவிரமாகப் பரவிக் கொண்டிருக்கையில், மிகப்பெரும் மருத்துவ நெருக்கடியை மீண்டுமொருமுறை நாடு சந்திக்கப் போகின்றதா? என்ற அச்சம் – கேள்வி – எழுவது தவிர்க்க முடியாததே.


கொரோனாப் பெருந்தொற்றைக் கண்டறியும் பணியில் கடந்த சில நாள்களாகவே தொய்வு நிலை ஏற்பட்டுள்ளமை தனித்துத் தெரிகின்றது. மருத்துவ உபகரணங்களுக்கான தட்டுப்பாடு காரணமாக சில மருத்துவமனைகளில் அன்டிஜென், பி.சி.ஆர். பரிசோதனைகள் வரையறைப்படுத்தப்பட்டுள்ளன, சில இடங்களில் முற்றாக நிறுத்தப்பட்டுமுள்ளன. கொழும்பில் இருந்து மருத்துவ உபகரணங்கள் விடுவிக்கப்பட்டால்தான் மேற்படி சோதனைகளை தடங்கல் இல்லாமல் மேற்கொள்ள முடியும் என்ற நிலை அந்தந்த மருத்துவமனைகளில் ஏற்பட்டுள்ளது.

இவ்வாறாக, மருத்துவக் கருவிகளுக்கு ஏற்பட்டுள்ள பற்றாக்குறை காரணமாக கொரோனாவின் பரவுகைக்கான வாயில்கள் அகலத் திறந்திருக்கையில், சுகாதாரத் தொழிற்சங்கங்கள் நடத்துகின்ற போராட்டம் கொரோனாக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுக்கு விழுந்த சம்மட்டி அடியாக மாறியிருக்கின்றது. தடுப்பூசி ஏற்றும் திட்டத்திலும் தொய்வு நிலையொன்றை இந்தப் போராட்டம் ஏற்படுத்தியிருக்கின்றது. இராணுவத்தினரை வைத்து சில இடங்களில் தடுப்பூசித் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்ற போதிலும்,இது எவ்வளவு தூரம் நடைமுறைச் சாத்தியமானது? எத்தனை நாளைக்கு இந்த மாற்றுத் திட்டம் வெற்றியளிக்கும்? என்ற சந்தேகங்களும் துளிர்க்கின்றன.

கொரோனாப் பெருந்தொற்றைக் கட்டுப்படுத்தும் வகையில் நடைமுறைப்படுத்தப்பட்ட சுகாதார வழிமுறைகளை இறுக்கமாகப் பின்பற்றுங்கள் என்று மாறிமாறி பொதுமக்களை வலியுறுத்தும் அரசாங்கத்தினர், கொரோனாவைக் கட்டுப்படுத்தக்கூடிய ஏதுநிலைகளை – செயற்றிட்டங்களை – வினைத்திறனாக முன்னெடுக்கின்றோமா? என்று சுய பரிசீலனை செய்ய வேண்டியது இன்றைய காலத்தேவை.

இப்போதெல்லாம் சுகாதாரத் தொழிற்சங்கத்தின் போராட்டம் அடிக்கடி நடைபெறும் வழக்கமான விடயங்களில் ஒன்றாக மாறிவிட்டது. சுகாதாரத் தொழிற்சங்கங்களுடன் உரியவாறு பேச்சுக்கள் நடத்தப்படவோ தீர்வுகள் எட்டப்படவோ இல்லை. கொரோனாக் கொத்தணிகள் ஏற்படுவதற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்திவிட்டு, பின்னர் தமது அசண்டையீனங்களாலும் வினைத்திறனற்ற நிர்வாகத்தாலும் 'செயற்கையாக' ஏற்படுத்தப்பட்ட கொத்தணிகளுடன் மாரடிப்பதையும், மக்கள்தான் கொத்தணிகளுக்குக் காரணம் என்று சுட்டுவதையும் என்னவென்று சொல்வது?

நாடெங்கிலும் ஒமிக்ரோன் பற்றிப்படர்ந்துள்ளது. கொரோனாவால் பாதிக்கப்படுபவர்களில் பலர் ஒமிக்ரோன் திரிபுடன்தான் அடையாளப்படுத்தப்படுகின்றனர். இப்படியிருக்கையில், தமது பாதுகாப்பை இயன்றளவு உறுதிப்படுத்த வேண்டியது பொதுமக்களின் பொறுப்பும் – கடமையுமாகும். எத்தனை பிடுங்குப்பாடுகள் மருத்துவத் துறையினருக்கும் அரசாங்கத்துக்கும் இடையில் இருந்தாலும் இந்தப் பிரச்சினைகளின் விளைவாக உருவாகும் பாதிப்பை எதிர்கொள்பவர்கள் அப்பாவிப் பொதுமக்கள்தான். எனவே, இயன்ற வரையில் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டிய தேவை – கடமை – கட்டாய நிலை பொதுமக்களுக்கு உள்ளது. அதிகபட்ச விழிப்புணர்வுடன் செயற்படுங்கள். சுகாதார நடைமுறைகளை இறுக்கமாகப் பின்பற்றுங்கள். கொரோனாவுடன் வாழப்பழகுதல் என்பது கொரோனாத் தொற்றுக்கு ஆட்படுதல் அல்ல என்பதையும் நினைவில் கொள்ளுங்கள்.




### ஹபாயா ஆடை விவகாரத்தில்

# தமிழ்த் தலைவர்கள் மௌனிப்பது எதற்கு?

**கொழும்பு, பெப். 11**

**திருகோணமலை ஸ்ரீசண்முகா இந்து மகளிர் தேசியக் கல்லூரியில் இடம்பெற்ற முஸ்லிம் ஆசிரியையின் 'ஹபாயா' ஆடை தொடர்பான பிரச்சினையில் தமிழ்த் தலைவர்கள் மௌனம் காப்பது வேதனை தருகிறது. விடுதலைப்புலிகளின் போராட்டக் காலத்தில்கூட இவ்வாறானதொரு ஆடைப் பிரச்சினை ஏற்பட்டதில்லையென ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான எச்.எம்.எம்.ஹரீஸ் தெரிவித்தார்.**

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்:

விடுதலைப்புலிகள் ஆயுதம் ஏந்தி போராடிய காலத்தில் கூட பல இஸ்லாமிய மாணவர்கள் தமிழ் பாடசாலைகளிலும் தமிழ் மாணவர்கள் இஸ்லாமிய பாடசாலைகளிலும் அதே போன்று ஆசிரியர் ஆசிரியைகளும் கடமை யாற்றியபோது கூட கலாசார உடை சம்பந்தமான, மத விடயங்கள் சம்பந்தமான எந்த வித அசம்பாவிதங்களும் நடைபெற்றதாக நான் கேள்விப்படவில்லை. ஆனால் இன்று இவ்வாறான கசப்பான சம்பவங்கள் இடம்பெறுகின்றன.

கடந்த இரு மாதங்களுக்கு முன்புதான் வடக்கு-கிழக்கு இனப்பிரச்சினை தீர்வு சம்பந்தமாக தமிழ், முஸ்லிம் கட்சிகள் பேசியிருந்தன. தமிழ் மக்களின் ஆயுதப் போராட்ட தியாகத்துக்காக அர்த்தபுஷ்டியான ஒரு அரசியல் பரவலாக்கம் வரவேண்டும் என்பதற்காக முஸ்லிம் தலைமைகள் ஒன்றோடு ஒன்றாக இருந்து பேசிய அந்தச் சந்தர்ப்பத்தை நீங்கள் மறந்துவிடக்கூடாது.

தமிழ் முஸ்லிம்கள் ஒற்றுமையாக செயற்படுகின்ற போதுதான் இந்த நாட்டில் இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வு காண முடியும். வடக்கு - கிழக்கில் உள்ள முஸ்லிம் சமூகம் 'ஹபாயா' உரிமைக்காகப் போராடுகின்ற சமயத்தில் எவ்வாறு அரசியல் உரிமை தொடர்பாக நாங்கள் ஒரு உடன்பாட்டுக்கு வரமுடியும்? - என்றார். (ம-22)

# சிறு குற்றத்துக்கு வீட்டுச் சிறை

## சிறைச்சாலைகள் திணைக்களம் பரிசீலனை

கொழும்பு, பெப்.11

சிறிய குற்றங்களுக்காக கைதிகளை சிறையில் அடைக்காமல் வீட்டுக்காவலில் வைக்கும் முறையை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் சிறைச்சாலைகள் திணைக்களம் கவனம் செலுத்தி வருகிறது.

சிறைச்சாலைகளில் நெரிசலைக் குறைப்பதும், கைதிகளுக்காக அரசாங்கம் செலவிடும் பெரும் தொகையைச் சேமிப்பதும் இந்தத் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். அவர்களின் உடலில் எங்காவது ஒரு மின்னணு சாதனம் பொருத்தப்பட்டு கண்காணிக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்ட முன்மொழிவு நீதியமைச்சர் அலி சப்ரியிடம் கையளிக்கப்பட்டுள்ளது என சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளர் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்தார். (வ-இ)

நாளை 12.02.2022 சனிக்கிழமை தை 30

சுபநேரம் : 03.34 - 0504
ராகுகாலம் : 09.34 - 11.04

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடனைச் செலுத்தும் இயலுமை இலங்கைக்கு உள்ளது

## மத்திய வங்கி விளக்கம்

கொழும்பு, பெப்.11

கடன்களை மீளச் செலுத்த முடியாத நிலையில் இலங்கையுள்ளது என வெளியாகியுள்ள செய்திகளில் எந்தவித உண்மையும் இல்லை என இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது. இதுகுறித்து மத்திய வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கபட்டுள்ளதாவது: கடன் மீளச்செலுத்துகை தொடர்பான கடப்பாடுகளைப் பூர்த்தி செய்வதில் அரசாங்கமும், மத்திய வங்கியும் உறுதியாக உள்ளன. கடந்த ஜனவரி மாதத்துடன் முடிவடைந்த சர்வதேச பிணைமுறிகளுக்குரிய 500 மில்லியன் அமெரிக்க டொலர் கொடுப்பனவை மீளச்செலுத்துவது சாத்தியமற்றது என்று சில தரப்பினரால் கூறப்பட்டபோதிலும், நாம் அந்தக் கொடுப்பனவை வெற்றிகரமாகச் செலுத்தியுள்ளோம். சர்வதேச பிணைமுறி களுக்காக கடந்த 2020 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திலிருந்து 2.5 பில்லியன் அமெரிக்க டொலரை மீளச்செலுத்த வேண்டியிருந்த நிலையில், தற்போது அந்தத் தொகை வீழ்ச்சியடைந்திருப்பதுடன் எதிர்வரும் ஜூலை மாதமளவில் அது மேலும் வீழ்ச்சியடையும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அதனை அடைந்துகொள்வதற்கு அவசியமான நடவடிக்கைகள் அரசாங்கத்தாலும் மத்திய வங்கியாலும் ஏற்கனவே முன்னெடுக்கப்பட்டிருக்கின்றன. குறிப்பாக இருதரப்பு மற்றும் பல்தரப்பு நிதியுதவிகள் மூலம் வெளிநாட்டு நாணய உட்பாய்ச்சலை உறுதி செய்வதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன - என்றுள்ளது. (வ-இ)

# படகுகள் ஏலம் தொடர்பில் இருதரப்புப் புரிந்துணர்வு!

## இந்தியத் தூதரகம் அறிக்கை



**கொழும்பு, பெப். 11**

**இலங்கையினால் கைப்பற்றப்பட்டுள்ள மீன்பிடிப் படகுகளை ஏலம் விடுவது தொடர்பாக இலங்கை-இந்திய அரசாங்கங்களுக்கு இடையே இருதரப்பு புரிந்துணர்வு காணப்படுவதாக இலங்கைக்கான இந்தியத் தூதரகம் அறிவித்துள்ளது.**

இலங்கையில் உள்ள பயன்படுத்த முடியாத மீன்பிடிப் படகுகளை அப்புறப்படுத்துவது குறித்து இறுதி முடிவு எடுப்பதற்காக தமிழகத்தைச் சேர்ந்த குழு ஒன்று இலங்கைக்கு வர உள்ளதாகவும் இது தொடர்பில் இலங்கை அரசுடன் பேச்சு நடத்தப்பட்டுள்ளது என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

# அம்பாறை வீடுகளில் கொள்ளை தேரர்கள் உட்பட எழுவர் கைது

அம்பாறையில் நீதிவானின் வீடு உள்ளிட்ட பல வீடுகளை உடைத்து கொள்ளையிட்டனர் என்ற குற்றச்சாட்டில், இரு தேரர்கள் உள்ளிட்ட 7 பேரை விசேட பொலிஸ் குழுவினர் கைது செய்துள்ளனர். அவர்களிடமிருந்து தாலிக்கொடி உள்ளிட்ட 56.5 பவுண் தங்க ஆபரணங்களும் மீட்கப்பட்டுள்ளன. அம்பாறை மாவட்டத்தில் கடந்த ஒரு மாதத்தில்4 வீடுகளை உடைத்து, சுமார் 30 பவுணுக்கு மேற்பட்ட தங்க நகைகள் கொள்ளையிடப்பட்டன. இதனையடுத்து 3 பொலிஸ் அதிகாரிகள் தலைமையிலான குழுவினர் தொடர் விசாரணைகளில் ஈடுபட்டனர்.

இதன்போது திருக்கோவிலைச் சேர்ந்த சந்தேகநபரைக் கைது செய்தனர். மேலதிக விசாரணையில் இந்தக்கொள்ளையுடன் தேரர்கள் தொடர்புபட்டுள்ளனர் என்று தெரியவந்தது. இதனையடுத்து இரு தேரர்களையும் பொலிஸார் கைது செய்தனர். அத்துடன் கொள்ளையடிக்கப்பட்ட தங்க ஆபரணங்களை வாங்கி விற்று வந்தவர்களும் கைது செய்யப்பட்டனர்.

இந்தச் சம்பவங்களுடன் தொடர்புடையோர் என்ற குற்றச்சாட்டில், இதுவரை இரு தேரர்கள் உட்பட 7 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் இருவர் பொலிஸ் காவலிலும், 5 பேர் விளக்கமறியலிலும் வைக்கப்பட்டுள்ளன. தலைமறைவாகியுள்ள பிரதான சூத்திரதாரிகள் இருவரைப் பொலிஸார் தேடி வருகின்றனர். (ஒ-4-இ)

# அறிமுகமும் கண்காட்சியும்

கொழும்பு,பெப்.11

இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் இந்துக் கலைக் களஞ்சியத் தொகுதி மற்றும் பிற வெளியீடுகளின் அறிமுகம் மற்றும் கண்காட்சி ஆகியன நாளையும், நாளை மறுதினமும் கொழும்பு தமிழ்ச் சங்கம், சங்கரப்பிள்ளை மண்டபத்தில் இடம்பெறவுள்ளன.

அறிமுகவிழா நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு கண்காட்சி அன்றையதினமும் மறுநாள் ஞாயிற்றுக் கிழமையும் இடம் பெறவுள்ளன. (ஒ-4-இ)

# தொண்டைவலி நீங்க வழிபாடு சிறுவன் சாவு; மூவர் கைது

கொழும்பு,பெப்.11

தொண்டைவலியால் பாதிக்கப்பட்டிருந்த சிறுவன் குணமடைய வேண்டி, பெற்றோர் செய்த மத வழிபாட்டால் 10 வயதுடைய சிறுவன் உயிரிழந்துள்ளான்.

இந்தச் சம்பவம் பண்டாரகம பட்டல்கமுவ ஆதிமுல்லப் பிர தேசத்தில், நடந்துள்ளது.

வீடொன்றிலிருந்து துர்நாற்றம் வீசியதை அடுத்து, குறித்த வீட்டை சோதனையிட்ட போதே சிறுவனின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.


தொண்டை வலியால் பாதிக்கப்பட்டிருந்த சிறுவன், குணமடைய வேண்டி, பெற்றோர் மத வழிபாடுகளில் ஈடுபட்டுள்ளனர். அதன் போதே சிறுவன் உயிரிழந்துள்ளான். எனினும் பெற்றோர் மருத்துவ சிகிச்சைக்கு அவனைக் கொண்டு செல்லவில்லை என்று முதற்கட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

இதனையடுத்து சிறுவனின் தாய், தந்தை மற்றும் பாட்டி ஆகியோரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

படல்கமுவப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஒ-4-இ)

# நனோ நைட்ரஜனில் இந்தியா அனுபவசாலி

## சஷிந்திர ராஜபக்ச விளக்கம்



கொழும்பு, பெப்.11

நனோ நைட்ரஜன் உரப் பயன்பாட்டில் இந்தியா எம்மைவிட அனுபவம் உள்ள நாடு என்பதாலேயே அங்கிருந்து குறித்த திரவ உரத்தைக் கொண்டுவந்தோம். என இராஜாங்க அமைச்சர் சஷிந்திர ராஜபக்ச தெரிவித்தார்.

இந்திய நிறுவனம் ஒன்றுக்கு 8 இலட்சம் ஏக்கர் விவசாய நிலத்தை நனோ நைட்ரஜன் உரப்பரிசோதனைக்காக வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டமை தொடர்பில் எதிர்க்கட்சி உறுப்பினர் கயந்த கருணாதிலக்க நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் புதன் கிழமை எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

நனோ தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, எமது நாட்டிலும் உரம் தயாரிக்க நடவடிக்கை எடுத்துவந்தோம். என்றாலும் இந்தியா இதில் எம்மைவிட அனுபவம் உள்ள நாடு என்பதால், இந்தியாவில் இருந்து குறித்த திரவ உரத்தை கொண்டுவந்தோம். இவ்வாறு இல்லாமல் எமது விவசாய நிலத்தை இந்தியாவுக்கு பரிசோதனைக்காக வழங்கவில்லை. கமத்தொழில் திணைக்களத்தின் பணிப்பாளர் இதுதொடர்பான பொறுப்பை ஏற்றுக் கொள்வதாகத் தெரிவித்திருக்கின்றார். அத்துடன் குறித்த திரவ உரம் தொடர்பில் இந்திய கமத்தொழில் அதிகாரிகளுடன் பல கலந்துரையாடல்களை எமது அதிகாரிகள் முன் னெடுத்திருந்தனர். அவர்களின் பரிந்துரைக்கமையவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது - என்றார். (வ-இ)

# தென்கொரியாவுக்கு மைத்திரி பயணம்

கொழும்பு,பெப்.11

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும், முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தென் கொரியாவுக்குப் பயணித்துள்ளார்.

தென்கொரியாவில் நடைபெறும் உலக சமாதானப் பேரவையில் பங்குபற்றுவதற்காகவே அவர் தென்கொரியா பயணித்துள்ளார்.

இதற்கு முன்னதாக கொரியா மற்றும் இலங்கையின் தற்போதைய நிலைவரங்கள் தொடர்பில் கொரியத் தூதுவருடன் அவர் கலந்துரையாடியுள்ளார். இதன்போது தூதுவர் முன்வைத்த ஆலோசனைகள் மற்றும் கருத்துக்களுக்கு மைத்திரிபால நன்றி தெரிவித்தார். (ஒ-4-இ)

# உணவுத் திருட்டில் குரங்குகள் பதுளை வர்த்தகர்கள் பாதிப்பு

பதுளை, பெப்.11

பதுளை மாவட்டத்தில் உணவுத் திருட்டில் குரங்குகள் இறங்கியுள்ளதால் அந்தப் பகுதி வர்த்தகர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, பெரகலச் சந்தியிலுள்ள கடைகளிலிருந்து நாளொன்றுக்கு குறைந்தது 10 ஆயிரம் ரூபாவுக்கும் அதிக பெறுமதியான பொருள்களை குரங்குகள் திருடிச் செல்கின்றன எனச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. அதிக பசி காரணமாக இவ்வாறான நடவடிக்கைகளில் குரங்குகள் இறங்கியுள்ளன. குரங்குகளை விரட்ட சில வர்த்தகர்கள் மட்டைகளைப் பயன்படுத்தினாலும், குரங்குகளை தாக்கினால் அவை மோசமாக செயற்பட வாய்ப்புள்ளதென பிரதேச மக்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர். (வ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடுத்த புதிய திரிபு உருவாக வாய்ப்பு

## உலக சுகாதார அமைப்பு எச்சரிக்கை



லண்டன், பெப்.11
ஒமிக்ரோனுக்கு அடுத்ததாக புதிய உருமாறிய கொரோனாத் தொற்று பரவ அதிகமாக வாய்ப்புள்ளது என உலக சுகாதார அமைப்பு எச்சரித்துள்ளது.

இதனை உலக சுகாதார அமைப்பின் கொரோனாத் தொழில்நுட்பப் பிரிவுத் தலைவர் மரியா கிர்கோவ் தெரிவித்துள் ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொரோனாத் திரிபுகளில் ஒமிக்ரோன் வைரஸ் கடைசித் திரிபாக இருக்காது. மேலும் பல திரிபுகள் உருவாகி மக்களைத் தாக்க வாய்ப்புள்ளது.

உருவாகும் கொரோனாவின் அடுத்த திரிபு ஒமிக்ரோனை விட தீவிரமாகத் தொற்றும் தன்மை கொண்டதாக இருக்கும். அத்துடன் அதற்குப் பின்னும் சில திரிபுகள் உருவாக வாய்ப்புள்ளது.

அடுத்தடுத்த திரிபுகளுக்கு எதிராக தடுப்பூசிகளின் எதிர்ப்புத்திறன் குறையக்கூடும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-இ)



ஹிஜாப் விவகாரம்

# அவசர விசாரணைக்கு உச்சநீதிமன்றம் மறுப்பு

கர்நாடகா, பெப்.11
கர்நாடகாவில் ஹிஜாப் விவகாரம் தொடர்பான மனுவை அவசர விசாரணைக்கு எடுத்துக்கொள்ள உச்சநீதிமன்றம் மறுப்பு தெரிவித்துள்ளது.

மூத்த வழக்கறிஞரான கபில் சிபல் உச்சநீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்த நிலையில், அவசர விசாரணைக்கு உச்சநீதிமன்றம் மறுப்பு தெரிவித்துள்ளது.

கர்நாடக மாநிலத்தில் உள்ள கல்லூரி ஒன்று மாணவிகள் ஹிஜாப் அணிந்து வர தடை விதித்தது. இதை எதிர்த்து மாணவிகள் போராட்டம் நடத்தினர். ஹிஜாப் அணிய விதிக்கப்பட்ட தடைக்கு ஆதரவாக இந்துத்துவா அமைப்பினர் காவிநிறத் துண்டு அணிந்து கோசம் எழுப்பினர்.

இதனால் மாணவ , மாணவிகள் சீருடைகளையே அணிய வேண்டும் என கர்நாடக அரசு உத்தரவிட்டது. இதை எதிர்த்து அம்மாநில உயர்நீதிமன்றத்தில் முஸ்லிம் மாணவர்களால் வழக்கு தொடரப்பட்டது.

இந்த ஹிஜாப் விவகாரம் தற்போது கர்நாடக மாநிலம் முழுவதும் விஸ்வரூபம் எடுத்துள்ளது.

இந்த நிலையில், மூத்த வழக்கறிஞரான கபில் சிபல் உச்சநீதிமன்றத்தில் மனு ஒன்றை தாக்கல் செய்தார்.

அதில், ஹிஜாப் விவகாரம் நாடு முழுவதும் பரவியுள்ளது. கர்நாடக மாநிலத்தில் கல்லெறி சம்பவங்களும் நடைபெறுகின்றன. கர்நாடக மாநில உயர்நீதிமன்றத்தில் உள்ள ஹிஜாப் தொடர்பான வழக்குகளை உச்சநீதிமன்றத்துக்கு மாற்ற வேண்டும் என்றும் இந்த மனுவை அவசர விசாரணைக்கு ஏற்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்திருந்தார்.

ஆனால், மனுவை அவசர விசாரணைக்கு ஏற்க உச்சநீதிமன்றம் மறுப்பு தெரிவித்துள்ளது. (ச-இ)

# வெளியுறவு அமைச்சர் அவுஸ்திரேலியா பயணம்

புதுடில்லி, பெப்.11
இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் 6 நாள் பயணமாக அவுஸ்திரேலியா மற்றும் பிலிப்பைன்ஸுக்கு நேற்று சென்றுள்ளார். முதற்கட்டமாக அவுஸ்திரேலியா செல்லும் ஜெய்சங்கர், இன்று மெல்போர்ன் நகரில் நடைபெறும் இந்தியா, அவுஸ்திரேலியா, ஜப்பான், அமெரிக்க வெளியுறவு அமைச்சர்கள் மாநாட்டில் பங்கேற்கிறார்.

நாளை 12ஆம் திகதி அவுஸ்திரேலிய வெளியுறவு அமைச்சர் மோரிஸ் பெய்னியைச் சந்தித்துப் பேசவுள்ளார். இதில் இரு தரப்பு உறவை மேம்படுத்துவது தொடர்பாக பல்வேறு விடயங்கள் விவாதிக்கப்படவுள்ளது.

தொடர்ந்து 13 முதல் 15ஆம் திகதி வரை பிலிப்பின்ஸுக்கு ஜெய்சங்கர் பயணம் மேற்கொண்டு அந்த நாட்டு வெளியுறவு அமைச்சர் உள்ளிட்டோரை சந்தித்துப் பேசவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

# வெளிநாட்டு பயணிகளுக்கு கட்டுப்பாடுகள் தளர்வு

*இந்திய மத்திய சுகாதாரத்துறை அறிவிப்பு*

புதுடில்லி, பெப்.11
இந்தியா வரும் வெளிநாட்டுப்பயணிகளுக்கானகொரோனாக் கட்டுப்பாடுகளை மத்திய சுகாதாரத்துறை அமைச்சகம் தளர்த்தியுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக, மத்திய சுகாதாரத்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

2 டோஸ் கொரோனாத் தடுப்பூசி செலுத்திக் கொண்ட சர்வதேசப் பயணிகளுக்கு 7 நாள்கட்டாயதனிமை இல்லை. கொரோனாத் தொற்றுக் குறைந்து வருவதால் வெளிநாட்டுப் பயணிகளுக்கு இனி பி.சி.ஆர். பரிசோதனையும் கட்டாயமில்லை.

இந்த புதிய செயற்பாடு இம்மாதம் 14 ஆம் திகதி நடைமுறைக்கு வரும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# ஓடிடியில் பொன்னியின் செல்வன்?



சென்னை, பெப்.11
இயக்குநர் மணிரத்னத்தின் இயக்கத்தில் பிரமாண்டமாக உருவாகியுள்ள 'பொன்னியின் செல்வன்' திரைப்படம் நேரடியாக ஓடிடியில் வெளியாகவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இதில் ஜெயம் ரவி, கார்த்தி, விக்ரம், பிரகாஷ்ராஜ், பிரபு, ரகுமான், திரிஷா, ஐஸ்வர்யா ராய், கீர்த்தி சுரேஸ் போன்ற பல முன்னணி நடிகர்கள் நடித்துள்ளனர்.

இரண்டு பாகங்களாக வெளியாகவுள்ள இந்தப் படம் தற்போது நேரடியாக ஓடிடியில் வெளியாகவுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. எனினும் இது குறித்து அதிகாரபூர்வ தகவல்கள் வெளியாகவில்லை. (ச)

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** தவறு செய்வோருக்கு எதிராக குரல் உயர்த்துவீர்கள். இன்று நல்ல செய்தி ஒன்று வரும். உங்களின் புகழ்கூடும். உங்களது உழைப்புக்கேற்ற பலன் கிடைக்காத நிலை மாறும்.

**இடபம்:** ஆரோக்கியத்தில் அக்கறை எடுப்பீர்கள். சுறுசுறுப்பான நாள். பணியிடத்தில் கண்டிப்புக் கலந்த நடவடிக்கை எடுப்பீர்கள். பொறுமையுடன் முன்னேறுவீர்கள்.

**மிதுனம்:** எண்ணம் நிறைவேறும். பயங்கள் காணாமற் போகும். புதியவர்களின் அறிமுகம் கிடைக்கும். உங்களது கனவு நனவாகும். தெய்வ வழிபாடு நன்மை தரும்.

**கடகம்:** எதிலும் அவசரம் வேண்டாம். தந்தைக்கு நன்மை செய்வீர்கள். நியாயமான முயற்சியின் மூலம் நன்மை அடைவீர்கள். வாழ்க்கைத் துணை செய்யும் நல்ல செயல்களுக்கு துணை நிற்பீர்கள்.

**சிம்மம்:** கற்பனை பயங்கள் முடிவுக்கு வரும். அதிர்ஷ்டமான நாள். மற்றவர் எண்ணங்களுக்கு மதிப்பளிப்பீர்கள். நட்பு வட்டம் விரியும். உயர்ந்தோரின் நட்பு கிடைக்கும். கடன் அனுமதி கிடைக்கும்..

**கன்னி:** சுப நிகழ்ச்சிகளில் பங்கேற்பீர்கள். உங்களின் செல்வாக்கு கூடும். விமர்சனங்களை ஒதுக்கித் தள்ளுங்கள். [illegible] மகிழ்ச்சி ஏற்படும்.

**துலாம்:** விருந்தில் பங்கேற்பீர்கள். எதிர்பார்த்த நன்மை தேடிவரும். பேச்சிலும் செயலிலும் கவனமாக இருந்தால் இனிய நாள். குடும்பத்தில் நிம்மதி பிறக்கும். உறவினர் உங்களை தேடி வரக்கூடும்.

**விருச்சிகம்:** உங்களுக்கு நன்மை தரக்கூடிய மாற்றங்கள் உருவாகும். புதிய விஷயங்களில் ஈடுபடும் முன் அதிக கவனம் தேவை. இன்று எதிலும் கவனமாக செயற்பட்டு வெற்றி பெறுவீர்கள்.

**தனுசு:** மன நிம்மதி ஏற்படும். நண்பர்களுக்கு உதவி செய்வீர்கள். எதிர்பாராத நன்மைகள் விளையும். வியாபாரத்தில் குறைந்த லாபம் வரும். வீட்டைப் புதுப்பிப்பதை சற்று தள்ளிப் போடுவீர்கள்.

**மகரம்:** உற்சாகமான நாள். எதிர்பாராத லாபம் வரும். வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் சீராக இருக்கும். எதிர்பார்த்துக் காத்திருந்த நல்ல செய்தி ஒன்று வரும்.

**கும்பம்:** பகை நீங்கும். எதிர்ப்பாலினத்தினர் மூலம் நன்மை வரும். கடுமையான முயற்சியால் நினைத்த நன்மையை அடைவீர்கள். எப்போதோ முயன்ற விஷயத்துக்கு இன்று பலன் உண்டு.

**மீனம்:** பணியில் கவனத்துடன் இருங்கள். வழிபாட்டில் ஈடுபடுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும். சுறுசுறுப்பாகச் செயல்படுவீர்கள். உங்களின் அந்தஸ்து உயரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இலங்கையில்

# எண்ணெய் வள ஆய்வு இணங்கியது இந்தியா

கொழும்பு,பெப்.11

**இலங்கையில் எண்ணெய் வளத்தை ஆராய்வதற்கு, இந்தியா இணங்கியுள்ளது என்று எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.**



நாடாளுமன்றில் அவர் மேலும் தெரிவிக்கையில்:

ஆரம்ப மதிப்பீட்டின் அடிப்படையில், மன்னார் படுகையிலிருந்து சுமார் இரண்டு பில்லியன் கச்சா எண்ணெய் பீப்பாய்கள் மற்றும் சுமார் ஒன்பது டிரில்லியன் சதுர அடி இயற்கை எரிவாயு மற்றும் எண்ணெயைக் கண்டுபிடிக்க முடியும்.

எண்ணெய் ஆய்வுக்கான அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் உள்ளன. இது தொடர்பாக இந்தியாவுடன் கலந்துரையாடியுள்ளோம். எதிர்வரும் மார்ச் மாதம் அமெரிக்காவில் நடைபெறவுள்ள மாநாட்டில், முன்மொழிவுகளைச் சமர்ப்பித்து, தனியார் முதலீட்டாளர்களுக்கு அழைப்பு விடுப்போம் - என்றார். (ஒ-4-இ)

## சந்நிதியான் ஆச்சிரமத்தால் உலர் உணவுப்பொதிகள்



முல்லைத்தீவு, பெப்.11

முல்லைத்தீவு மாவட்டத்தின் மல்லாவி வடக்கு மங்கைநகர் கிராமத்தில் பொருண்மியம் நலிவடைந்த சுமார் 125 குடும்பங்களுக்கு அத்தியாவசிய உலர்உணவுப்பொதிகள் வழங்கப்பட்டன.

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம மோகனதாஸ் சுவாமிகளின் நிதியுதவியில் குறித்த உலர்உணவுப் பொதிகள் கடந்த செவ்வாய்க்கிழமை வழங்கப்பட்டன.

துணுக்காய் பிரதேச சபை உப தவிசாளர் செல்வகுமார் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் சந்நிதியான் ஆச்சிரமத்தின் மோகனதாஸ் சுவாமிகள், சாவகச்சேரி நகராட்சி மன்றத்தின் முன்னாள் உறுப்பினர் ஞா. கிஷோர், சமூக சேவகர் இ.தயாபரன் மற்றும் கிராம அபிவிருத்தி சங்க தலைவர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (ச-159)

## அடுப்பு தீப்பற்றி பெண் தீக்காயம்

யாழ்ப்பாணம்,பெப்.11

மண்ணெண்ணெய் அடுப்பு தீப்பற்றி இளம் குடும்பப் பெண்ணொருவர் தீக்காயமடைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் யாழ்ப்பாணம், ஆறுகால்மடம் பகுதியில் நேற்று முன்தினம் நடந்துள்ளது.

இரவு உணவு தயாரித்துக் கொண்டிருந்த போது, அடுப்பில் மண்ணெண்ணெய் தீர்ந்துள்ளது. அதனால் அடுப்புக்குள் மண்ணெண்ணெயை ஊற்றிய போது, தீப்பற்றியுள்ளது.

சம்பவத்தில் காயமடைந்தவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஒ-4-இ)

### *வவு. ரயில் நிலைய வீதியில்*

## பழமைமிகு நிழல்தரு மரங்கள் அழிப்பு



வவுனியா, பெப்.11

வவுனியா, புகையிரத நிலைய வீதியில் காணப்படுகின்ற பழமையான நிழல்தரு மரங்கள் அழிக்கப்பட்டு வருகின்றன எனத் அந்தப்பகுதி மக்களால் விசனம் தெரிவிக்கப்படுகிறது. இதுதொடர்பில் எந்தவொரு தரப்பினரும் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை எனவும் தெரிவித்துள்ளனர்.

இந்த விடயம் பற்றி மக்கள் மேலும் தெரிவிக்கையில்:

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் வவுனியா, வைரவப்புளியங்குளம் பகுதியில் உள்ள ஆலயம் ஒன்றின் தேர்ப் பாதையில் காணப்பட்ட பழமையான மரம் ஒன்று வெட்டப்பட்டது. அது தொடர்பில் வவுனியா பிரதேச செயலரின் அறிவுறுத்தலின்பேரில் ஆலய நிர்வாகத்தினர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டிருந்தனர். ஆனால் தற்போது வீதியோரமாகக் காணப்படுகின்ற பெரிய மரங்கள் வெட்டிச் சரிக்கப்படுகின்றன.

இது தொடர்பில் வவுனியா நகர சபையை தொடர்பு கொண்டு கேட்டபோது.

தம்மால் இந்தச் செயற்பாடு முன்னெடுக்கப்படவில்லை. குறித்த பகுதி வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமானது எனத் தெரிவிக்கப்பட்டது.

வவுனியா வீதி அபிவிருத்தி அதிகாரசபையினை தொடர்பு கொண்ட போது, பதில் வழங்கக்கூடிய பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள் எவரும் அலுவலகத்தில் இல்லை எனத் தெரிவிக்கப்பட்டது என அப்பகுதி மக்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (ச-18)

## வயல் நிலங்களுக்குள் புகுந்து வளர்ப்பு மாடுகள் அட்டகாசம்

### *விவசாயிகள் கவலை*

சாவகச்சேரி, பெப்.11

தென்மராட்சி தெற்கு தனங்கிளப்புப் பகுதியில் காலபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்ட வயல் நிலங்களுக்குள் புகுந்து அந்தப் பகுதியிலுள்ள வளர்ப்பு மாடுகள் சேதம் ஏற்படுத்தி வருகின்றன என விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர். காலபோக நெற்செய்கை மேற்கொள்ளப்படுவதால் எதிர்வரும் ஏப்ரல் மாதம் வரை வளர்ப்பு மாடுகளைக் கட்டி வளர்க்குமாறு கமக்கார அமைப்புகள் விதைப்புக்கு முன்னரே அறிவித்திருந்தன. இருப்பினும் கால்நடை வளர்ப்போர் அவற்றை கட்டாமல் விடுவதால் கால்நடைகள் இரவு வேளைகளில் வயலுக்குள் புகுந்து பயிர்களைச் சேதப்படுத்துகின்றன என விவசாயிகள் விசனம் தெரிவித்துள்ளனர். (வ-9)



## முகக்கவசமின்றி ஊழியர் மக்கள் விசனம்

வவுனியா, பெப்.11

வவுனியா நகர சதொச கிளையில் பாதுகாப்பு ஊழியராகக் கடமையாற்றும் பெண் முகக் கவசமின்றி கடமையில் ஈடுபட்டமை தொடர்பில் பலரும் விசனம் தெரிவித்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில் நேற்று அங்கு வந்திருந்த வாடிக்கையாளர் ஒருவருக்கும் குறித்த ஊழியருக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டது. இதையடுத்து அங்கு வந்த பொலிஸார் இது தொடர்பில் விசாரணை மேற்கொண்டனர். அந்த வேளையிலும் குறித்த ஊழியர் முகக்கவசத்தை அணியாமல் தனது உடையில் வைத்திருந்த நிலையிலேயே காணப்பட்டார். இது தொடர்பில் சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அங்கு வந்திருந்த மக்கள் பலரும் வலியுறுத்தினர். (வ-110)

## 59, 42,255 பேருக்கு பூஸ்டர் தடுப்பூசி

நாட்டில் இதுவரை 59 லட்சத்து 42 ஆயிரத்து 255 பேருக்கு பூஸ்டர் டோஸ் வழங்கப்பட்டுள்ளது என்று சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைவாக நேற்றுமுன்தினம் 403 பேருக்கு சினோபார்ம் தடுப்பூசியின் முதல் டோஸும், 738 பேருக்கு இரண்டாவது சினோபார்ம் டோஸும், ஆயிரத்து 26 பேருக்கு பைஸர் தடுப்பூசியின் முதல் டோஸும், ஆயிரத்து 713 பேருக்கு இரண்டாவது பைஸர் டோஸும், 43 ஆயிரத்து 883 பேருக்கு பைஸர் பூஸ்டர் டோஸும் செலுத்தப்பட்டுள்ளன.

அதேவேளை கடந்த ஜனவரி மாதம் முதல் இலங்கையில் கொரோனாத் தொற்றுக்கு எதிராக 367 லட்சத்து 70 ஆயிரத்து 764 பேருக்கு தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-4-இ)

## போதைப்பொருள் கடத்தல் சாவுத்தண்டனை கட்டாயம்

### *அமைச்சர் நிமல் வலியுறுத்து*



கொழும்பு,பெப்.11

போதைப்பொருள் கடத்தல் மற்றும் திட்டமிட்ட குற்றச்செயல்களில் ஈடுபடுபவர்களுக்கு, சாவுத் தண்டனையைக் கட்டாயமாக்க வேண்டும் என்று தொழிலாளர் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

நாடாளுமன்றில் குற்றவியல் நடைமுறைச் சட்டம் (திருத்தம்) சட்ட வரைவு மீதான விவாதத்தில் அவர் மேலும் தெரிவிக்கையில்:

திட்டமிட்ட குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்களுக்கு ஏன் சாவுத் தண்டனை வழங்கப்படவில்லை?. இன்று பலர் இதனைச் சுட்டிக்காட்ட அஞ்சுகின்றனர். இவ்வாறான குற்றவாளிகளுக்கு சாவுத் தண்டனையை நடைமுறைப்படுத்துவதற்கான வேலைத்திட்டத்தை நீதியமைச்சர் ஆரம்பிக்க வேண்டும். அப்படிப்பட்டவர்களைச் செல்லமாக வைத்திருந்து எந்தப் பயனும் இல்லை - என்றார். (ஒ-4-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனிய மணல் அகழ்வுக்காக கொக்கிளாயில் நில அளவீடு

முல்லைத்தீவு,பெப்.11

**கொக்கிளாய் கிராமத்தில் மக்களின் பூர்வீகக் காணிகள், கனிய மணல் அகழ்வுக்காக அளவீடு செய்யப்படுகின்றன என்று கிராம மக்கள் குற்றஞ் சாட்டியுள்ளனர்.**

கொக்கிளாய் முகத்துவாரம் தொடக்கம் கொக்குத்தொடுவாய் வரையான விவசாயக் காணிகள் உள்ளடங்கலாக, குடியிருப்புக் காணிகளும், நில அளவைத் திணைக்களத்தினரால் அளவீடு செய்யப்பட்டுள்ளன.

ஏற்கனவே கொக்கிளாய் கிழக்குப் பகுதியில் 16 பேருக்குச் சொந்தமான 44 ஏக்கர் பூர்வீகக் காணிகள் எந்தவித முன்னறிவித்தலோ, இழப்பீடோ வழங்காது கையகப்படுத்தப்பட்டுள்ளன. அங்கு இல்மனைட் அகழ்வு நடவடிக்கையில் கனிய மணல் கூட்டுத்தாபனத் தால் ஆரம்பிக்கப்பட்டுள் ளது.

இந்த நிலையில் மேலும் காணிகளைக் கையகப்படுத்துவதற்காக அளவீடு செய்யப்பட்டு, எல்லைப்படுத்தும் நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன என்று காணி உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

கனிய மணல் அகழ்வுக்காக ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த காணி சுவீகரிப்பு, கொக்கிளாய் முகத்துவாரத்திலிருந்து கரையோரமாக கடற்கரையிலிருந்து அதிகமான பகுதிகளை சுவீகரிக்க ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. ஏற்கனவே மாவலி எல் வலயம் மற்றும் சிங்கள மீனவக் குடி யேற்றம், பௌத்த விகாரை என பல்வேறு வகையில் காணி அபகரிப்பு இடம்பெற்ற நிலையில், தற்போது கனிய மணல் கூட்டுதாபனமும் மக்களுக்குச் சொந்தமான காணிகளைக் கையகப்படுத்த நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது.

இது தமது இருப்பை கேள்விக்குள்ளாக்கும் செயற்பாடு என்று கிராம மக்கள் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில் வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன் பாதிக்கப்பட்டுள்ள காணி உரிமையாளர்களுடன் கலந்துரையாடலை மேற்கொண்டார். காணி அளவீடு செய்யப்பட்டுள்ள காணிகளையும் நேரில் பார்வையிட்டார். (ஒ-4-இ)

## கரித்தாஸ் வாழ்வுதயத்தால் 100 மரக்கன்றுகள் நடுகை



மன்னார், முசலியில் 'இலங்கையின் இயற்கை சூழலைப் பாதுகாப்பதற்கான படிக்கல்' எனும் கருப்பொருளில் மரக்கன்று நடுகை நிகழ்வு இடம்பெற்றது.

அதன்படி மன்னார் கரித்தாஸ் வாழ்வுதயம் நிறுவனத்தின் நடைமுறையில் மிசறியோ அமைப்பின் நிதியுதவியில் மன்னார் முசலி பிரதேச செயலர் பிரிவிலுள்ள வேப்பங்குளம் கிராமத்தில் நேற்றுமுன்தினம் 100 மரக்கன்றுகள் நடுகை செய்யப்பட்டன.

கரித்தாஸ் வாழ்வுதயம் நிறுவனத்தின் திட்ட இணைப்பாளர் ச.ஜேசுதாஸ் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் விருந்தினர்களாக மன்னார் கரித்தாஸ்வாழ்வுதயம் இயக்குநர் அருட்தந்தை எஸ்.அன்ரன் அடிகளார் மற்றும் வேப்பங்குளம் பள்ளிவாசல் மௌளவி எம். நதீர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மேலும் குறித்த பிரதேசத்தில் பொதுஇடங்களில் நடுகை செய்வதற்கான மரக்கன்றுகள் பகிர்ந்தளிக்கப்பட்டன. (ச-56)

## முல்லை. ஊடக அமையத்தால் வாழ்வாதார உதவி வழங்கல்



முல்லைத்தீவு ஊடக அமையத்தினூடாக பெண்தலைமைத்துவக் குடும்பங்கள் இரண்டுக்கான வாழ்வாதார உதவி யும், 23 மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டன. இதற்கான 2 லட்சத்து 20ஆயிரம் ரூபா நிதியுதவியை கொழும்பு வெள்ளவத்தையைச் சேர்ந்த மறைந்த ஆசிரியர் குகானந்தன் ஜெயபிரபா என்பவரின் குடும்பத்தினர் அவரது முதலாம்ஆண்டு நினைவு தினத்தையொட்டி வழங்கினர்.

இதன்படி, முல்லைத்தீவு முத்துஐயன்கட்டு பகுதியில் வசிக்கும் பெண் தலைமைத்துவக் குடும்பம் ஒன்றுக்கு கற்வைப் பசு ஒன்றும், மல்லாவி பிரதேசத்தில் வசிக்கும் பெண் தலைமைத்துவக் குடும்பம் ஒன்றுக்கு தையல் தொழிலுக்கான உபகரணங்களும் வழங்கப்பட்டன. அத்துடன், புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் மூங்கிலாறு 200 வீட்டுத் திட்ட கிராமத்தி லுள்ள பொருண்மியம் நலிந்த குடும்பங்களைச் சேர்ந்த 23 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களுக்கு வழங்கப்பட்டன. (வ-19)

## வீதி யாருக்குச் சொந்தம்? இழுபறியில் புனரமைப்பு

அச்சுவேலி தென்மூலைப்பகுதியிலிருந்து கைத்தொழிற்பேட்டைக்குச் செல்லும் வீதி, எந்தத் திணைக்களத்துக்குச் சொந்தமானது என்ற இழுபறியில், புனரமைக்கப்படாதுள்ளது.

கடந்த 40 வருடங்களாக குண்டும், குழியுமாக காணப்படும் இந்த வீதியால், விவசாயிகள், பாடசாலை மாணவர்கள் மற்றும் திணைக்களங்களுக்குச் செல்வோர் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

மழை காலத்தில் பாடசாலை மாணவர்கள் சீருடையுடன் வீதியில் இறங்க முடியாத அவல நிலை காணப்படுகின்றது. ஒரு கிலோ மீற்றர் நீளமான குறித்த வீதியைப் புனரமைத்துத் தருமாறு, 2009 ஆம் ஆண்டு முதல் மக்கள் வீதியில் இறங்கி போராட்டங்களை மேற்கொண்டனர்.

குறித்த வீதியைத் திருத்துவதற்காக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்று கோப்பாய் பிரதேச செயலரால் மக்களுக்கு உறுதி அளிக்கப்பட்டது.

எனினும் குறித்த வீதி எந்தத் திணைக்களத்துக்குரியது என்பதை அடையாளப்படுத்த முடியவில்லை என்று மாவட்டச் செயலர் பதிலளிக்கின்றார். அதனாலே அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ள முடியாத நிலை காணப்படுகின்றது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.தற்போது மூலைமுடுக்கெல்லாம் சிறு வீதிகள் காப்பெற் வீதிகளாக மாற்றம் பெறுகின்றன. எனவே குறித்த வீதியையும் உடன் புனரமைக்க வேண்டும் என்று பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஒ-4-23)

### பல்கலைக்கழகத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

1997 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகமாகவும், கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி முதல் இலங்கையின் 17 ஆவது பல்கலைக் கழகமாகத் தரமுயர்த்தப்பட்டது.

வியாபாரக் கற்கைகள், பிரயோக விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பக் கற்கைகள் எனும் மூன்று துறைகளின் கீழ் உயர் கல்வியை வழங்கும் நோக்குடன் இந்தப் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதன் முதலாவது துணைவேந்தராகக் கலாநிதி ரி.மங்களேஸ்வரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

வவுனியா பல்கலைக்கழகத்தின் உத்தியோகபூர்வச் செயற்பாடுகள் ஏற்கனவே ஆரம்பித்துள்ள நிலையில், ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச வைபவரீதியாகப் பல்கலைக்கழகத்தை இன்று திறந்து வைக்கவுள்ளார்.

இந்த நிகழ்வு பம்பைமடுவில் அமைந்துள்ள வவுனியா பல்கலைக்கழகத்தில் இன்று மு.ப. 10.30 மணிக்கு நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-எ-110,18)

### டிப்பருடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மோட்டார் சைக்கிளும், டிப்பர் வாகனமும் மோதியதாலேயே இந்த விபத்து நடந்துள்ளது. மோட்டார் சைக்கிளில் பயணித்தவரான, இளவாலை, உயரப்புலத்தைச் சேர்ந்த சசிகுமார் லிஷாந்த் (வயது-18) என்ற இளைஞரே உயிரிழந்தவராவார். அவருடன் பயணித்த இளவாலை, உயரப்புலத்தைச் சேர்ந்த இராசதுரை இராசசேகரன் (வயது-38) என்பவர் படுகாயமடைந்த நிலையில் தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

விபத்துடன் தொடர்புடைய டிப்பர் சாரதி காங்கேசன்துறைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். 21 வயதான சாரதி, மூதூரைச் சேர்ந்தவர் என்று கூறப்படுகின்றது. டிப்பர் வாகனமும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பாகக் காங்கேசன்துறைப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (அ-எ-125,27)

## மரண அறிவித்தல்



**திரு.கார்த்திகேசு வைத்தீஸ்வரன்**

(இளைப்பாறிய சுகாதாரப் போதனாசிரியர்- யாழ்ப்பாணம்)

மஞ்சத்தடி இணுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் தெகிவளையை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.கார்த்திகேசு வைத்தீஸ்வரன் அவர்கள் 09.02.2022 புதன்கிழமை அ[illegible] கொழும்பில் காலமானார். அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு சின்னப்பிள்ளை தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வனும், காலஞ்சென்றவர்களான கனகசபை - கண்மணி தம்பதியினரின் மருமகனும், காலஞ்சென்ற செல்வராணியின் அன்புக் கணவரும், கௌரி (ஆசிரியர் - கொழும்பு இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி) அவர்களின் பாசமிகு தந்தையும், நவரட்ணலிங்கம் அவர்களின் அன்பு மாமனாரும், காயத்திரி - சுவேதன், ஸ்ரீராம், யோகப்பிரணவன் ஆகியோர்ரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான வாமதேவன், மனோன்மணி, கேசவன், புவனேஸ்வரி மற்றும் கிருபாகரன் அவர்களின் அன்புச் சகோதரனுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் 10.02.2022 வியாழக்கிழமை கொழும்பில் நடைபெற்றது.

**இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.**

இல.7, அல்பேட் பிளேஸ், தெகிவளை
0112717401, 0777354084

தகவல் - குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடர் விபத்து மூவர் காயம்

வாகன விபத்தில் சிக்கிய இருவரைக் காப்பாற்ற முயன்ற, சிப்பாய் உள்ளிட்ட மூவர் காயமடைந்தனர். இந்த விபத்து கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உரும்பிராய் பகுதியில் நேற்றுக்காலை இடம்பெற்றது. காங்கேசன்துறைப் பகுதியிலிருந்து கடற்படை அதிகாரிகள் பயணித்த கார், நடைப்பயிற்சியில் ஈடுபட்டவர்களை மோதுவதைத் தவிர்ப்பதற்காக, விலகிச்செல்ல முற்பட்ட போது, மோட்டார் சைக்கிளுடன் மோதுண்டது. அதில் இருவர் காயமடைந்தனர்.

இதன்போது உரும்பிராய் சந்திப்பகுதியில் கடமையில் ஈடுபட்டிருந்த சிப்பாய் உதவ முயன்ற போது, கைதடியில் இருந்து மானிப்பாய் நோக்கிப் பயணித்த ஹைஏஸ் வாகனம் சிப்பாயை மோதித்தள்ளியது. அதில் சிப்பாய் காயமடைந்தார். விபத்தில் காயமடைந்தவர்கள் நோயாளர் காவு வண்டி மூலம் யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ஒ-4,125,23)


## சிவபூமி மனவிருத்திப் பாடசாலைகளுக்கான புதிய மாணவர் அனுமதி

**கோண்டாவில், கிளிநொச்சி மனவிருத்திப் பாடசாலைக்களுக்கான புதிய மாணவர் அனுமதி விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படுகிறது**

- இப் பாடசாலைகளில் விசேட பயிற்சி பெற்ற ஆசிரியர்களால் கற்பித்தலும், தொழிற்பயிற்சியும் நடைபெறுகிறது.
- மாணவர்களுக்கான போக்குவரத்து சேவையும் நடைபெறுகிறது.

தொடர்புகளுக்கு: தலைமையகம்,
சிவபூமி மனவிருத்திப்பாடசாலை, கோண்டாவில்.
021 222 7938 (cs. 18618) (2.6)



## 50 ஆவது திருமணநாள் வாழ்த்துக்கள்




**திரு.திருமதி அன்னலிங்கம் பூமாலை**
12ஆம் வட்டாரம் , புங்குடுதீவு.

இருமனங்கள் ஒரு மனதாய் இணைந்த திருமண வாழ்வில் 11.02.2022 இன்று பொன் விழாக் காணும் இணைபிரியா தம்பதியினரை இன்னும் நூறாண்டு காலம் வாழ்ந்திடவே இறைவனைப் பிரார்த்தித்து உளம் கனிந்து வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்
அம்பிகாபதி குடும்பம்
பெரியவிளான்

(CS 42825) (3/6)



## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 29 . 05 . 1980

உதிர்வு 16 . 01 . 2019



**அமரர் தங்கராசா ஜெயராகவன்**

திதி : தைமாத வளர்பிறை தசமி

ஆகாயத்தில் இரவு தோன்றி விடிய மறையும்
நட்சத்திரமாக நீ பூமியில் அம்மா என்னும்
அன்னையின் வயிற்றில் உதித்து பூமியில்
வாழ்ந்து இறைவனடி சேர்ந்து ஆண்டு மூன்று ஆகிவிட்டதைய்யா!
இந்த அம்மா எந்த நிமிசமும் உன்பிரிவுத்
துயரால் கலங்கித் தவிக்கின்றேன் உன் ஆத்மா
சாந்தி அடைய இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

ஓம்சாந்தி!

உன்பிரிவுத் துயரால் வாடும்
அம்மா தங்கராசா நாகேஸ்வரி (தவம்)
அக்கா ஜெயலட்சுமி அத்தான் தங்கவேல்
மருமக்கள்: ஷயந்த், அதிஷயா, நிமிஷா (சுவிஸ்)

பெரியமணல்,
வலந்தலை, காரைநகர்

(CS 42489)(3/6)



## எரிவாயுவினைக் குறிப்பிட்ட விலையை விட அதிக விலைக்கு விற்பனை செய்தல் தொடர்பான புகாரளித்தல்

தற்போது எமது நாட்டில் நிலவிவரும் அத்தியாவசியப் பொருள்களிற்கான தட்டுப்பாடு இருக்கின்ற அச்சத்தில் பொதுமக்கள் அத்தியாவசியப் பொருளான எரிவாயுவினையும் மிகுந்த சிரமத்தின் மத்தியில் கொள்வனவு செய்து வருகின்றனர். அவ்வாறு கொள்வனவு செய்யும் போது. மிகக் கூடுதலான விலையையும் கொடுக்க வேண்டிய நிலை அதிகமாகக் காணப்படுகின்றது.

எரிவாயுவினைச் சந்தைக் கடைகளுக்கு விநியோகம் செய்யும் எமது நிறுவனத்தின் விலையில், எவ்வித மாற்றமும் செய்யப்படவில்லை. **எரிவாயுவின் யாழ். மாவட்டத்தின் அதிகூடிய சில்லறை விலை 12.5 Kg ரூ. 2793.00** ஆகும். ஆகவே இவ்விலையை விட சந்தையில் விநியோகிக்கப்பட்ட எரிவாயுவினை அதிகூடிய விலைக்கு விற்பனை செய்வது தண்டனைக்குரிய குற்றமாகும். இவ்வாறு கொள்ளை இலாபத்திற்கு விற்பனை செய்யும் வர்த்தகர்கள் மற்றும் கடைகளினை எமக்குத் தெரியப்படுத்தவும்.

**புகார்களினைத் தெரிவிக்க நுகர்வோர் பாதுகாப்புச் சபை - 021 221 9001 அல்லது S.V. முருகேசு (பிரை) லிட் - 021 492 5830, 070 310 6135 ஆகிய இலக்கங்களுக்கு அழைக்கவும்.**

**எரிவாயுவினைச் சந்தையில் அதிக விலைக்கு வாங்கி ஏமாற வேண்டாம்.**

(cs 42854) (2.6)



## INVITATION FOR BIDS

### Valikamam South West Pradeshiya Sabha, Manipay

**Council Fund Project**

1. The Chairman, Local Authority Procurement Committee on behalf of the Valikamam South West Pradeshiya Sabha, Manipay Jaffna invites sealed bids from eligible and qualified bidders for the following items.

**Tender Table**

| S. N | Item Description | Unit | Bid Security Amount (Rs) Valid till 10th June 2022 | Contract Period (Days) |
|---|---|---|---|---|
| 01 | Supply of Desktop Computer with UPS | 15 | 26,250.00 | 60 days |
| 02 | Supply of Laptop Computer | 07 | 11,200.00 | 60 Days |
| 03 | Photo Copier | 03 | 12,000.00 | 60 Days |
| 04 | Printer | 04 | 1,800.00 | 60 Days |
| 05 | UPS | 27 | 2600.00 | 60 Days |
| | External Hard disk | 02 | | |
| 06 | Supply of Baler Machine | 01 | 8,000.00 | 60 Days |

2. Bidding will be conducted through National Competitive Bidding. To be eligible for contract award the bidders shall not have been blacklisted and possess the valid certificate of Business Registration in the relevant field issued by a legal Authority.
3. Eligible interested bidders may obtain further information from Valikamam South west Pradeshiya Sabha, Manipay Jaffna TP .No: 021-2256650 / 021-2256647 on any working days from 09.00 hrs to 15.00 hrs A complete set of Bidding Documents in English language shall be referred or purchased by interested bidders on the submission of a written application with copy of Business Registration certificate to the **Chairman, Local Authority Procurement Committee Valikamam South West PradeshiyaSabha, Manipay** from 11th February until 24th February 2022 from 9.00 hrs.to 15.00 hrs. Upon payment of a non-refundable fees of Rs.1000/=. The method of payment should be by cash.
4. Bids shall be delivered in two copies by Registered Post to the address **Chairman, Local Authority Procurement Committee, Valikamam South West Pradeshiya Sabha, Manipay** or direct on or before 10.30 hrs. on 25th February 2022. Late Bids will be rejected.
5. Bids will be opened soon after closing in the presence of the Bidders or their representatives who choose to attend.
6. Bids shall be valid up to 77 days till **13th May 2022**

**Chairman,
Local Authority Procurement Committee,
Valikamam Southwest Pradeshiya Sabha,
Manipay.
11.02.2022**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவை

பில்கிளாக். பொதியிடல். உதவியாளர். மாவறுத்தல். சமையல். வேலை பயிலுனர் என்பவற்றிற்கு பெண் ஊழியர் தேவை.

தொடர்பு: **077 174 6101**

## அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சேவை சங்கமம்

**அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடலும் யாழ்ப்பாண கிளை நிர்வாக தெரிவும்**

இடம் : புதிய உயர் கல்லூரி ஆரியகுளம் யாழ்ப்பாணம்.
காலம் : 12.02.2022 சனி முற்பகல் 10.00 மணி

மத்திய அரச சேவை மாகாண அரசசேவை அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் அனைவரும் கலந்து கொள்ளவும்.

சந்தண சூரியாராச்சி
அகில இலங்கை பொது செயலாளர்
**077 345 6371**

(CR 37543) (3/6)

## கண்ணீர் அஞ்சலி



எமது சக ஊழியர் **அ.செந்தூரன்** அவர்களின் மாமனார்

**திரு.வல்லிபுரம் கதிர்காமநாதன்**

அவர்கள் மரணமானதையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**மாவட்ட முகாமையாளரும் ஊழியர்களும்
தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை,
யாழ்ப்பாணம்.**

(cs.42853) (3.6)

## வடக்கு கூட்டுறவு அபிவிருத்தி வங்கி
## උතුරු සමුපකාර සංවර්ධන බැංකුව
# NCDB
## NorthernCo-operative Development Bank
## பதவி வெற்றிடம்

| பதவி | கல்வி தகமை/ அனுபவம் |
|---|---|
| *1 x திட்ட கள உத்தியோகத்தர் (1 வருடம்)* | • கூட்டுறவுத்துறை தொடர்பான அனுபவத்திற்கு முன்னுரிமை<br>• க.பொ.த உயர் தரம்/ 3 பாடங்களில் சித்தி<br>• விவசாயம் தொடர்பான அனுபவங்கள்<br>• அறிக்கை எழுதுதல் மற்றும் தகவல் தொடர்பாடல் திறன்<br>• MS Office மென்பொருளை கையாளும் திறன் |
| *1 x திட்ட கணக்கு உதவியாளர் (6 மாதம்)* | • கூட்டுறவுத்துறையில் அனுபவம்<br>• க.பொ.த உயர் தரம்/ 3சித்தி<br>• அறிக்கை எழுதுதல் மற்றும் தகவல் தொடர்பாடல் திறன்<br>• MS Office மென்பொருளை கையாளும் திறன் |
| *1 x முகாமையாளர் நிர்வாகம் மற்றும் நிதி* | • துறைசார் பல்கலைக்கழக பட்டம் / தொழில்முறை கற்கை நெறி கணக்கீடு தொடர்பாக<br>• கூட்டுறவுத்துறை தொடர்பான அனுபவத்திற்கு முன்னுரிமை<br>• குறைந்த பட்சம் 3 வருட தொழில் அனுபவம் - நிதி மற்றும் நிர்வாக முகாமைத்துவம்<br>• Accounting மென்பொருளை கையாளும் திறன்<br>• MS Office மென்பொருளை கையாளும் திறன்<br>• அறிக்கை எழுதுதல் மற்றும் தகவல் தொடர்பாடல் திறன் |
| *1 x சிரேஸ்ட உத்தியோகத்தர்: அபிவிருத்தி வங்கி* | • பல்கலைக்கழக பட்டம் அல்லது அதற்கு இணையான தகமை: பொருளியல், வர்த்தகம், சமூகவியல் அல்லது ஏனைய துறை<br>• குறைந்த பட்சம் 5 வருட தொழில் அனுபவம் -செயற்திட்ட முகாமைத்துவம். தொழில்துறை அபிவிருத்தி, operational delivary , அபிவிருத்தி வேலைதிட்டம் தொடர்பன திறன்<br>• செயற்திட்டங்களை திறன்பட முன்னெடுத்தல்,<br>• கூட்டுறவுத்துறை தொடர்பான அனுபவத்திற்கு முன்னுரிமை<br>• MS Office மென்பொருளை கையாளும் திறன்<br>• அறிக்கை எழுதுதல் மற்றும் தகவல் தொடர் பாடல் திறன் |
| *1 x உத்தியோகத்தர்: அபிவிருத்தி வங்கி* | • பல்கலைக்கழக பட்டம் அல்லது அதற்கு இணையான தகமை: நிதி, கணக்கீடு, அல்லது வர்த்தகம்<br>• கூட்டுறவுத்துறை தொடர்பான அனுபவத்திற்கு முன்னுரிமை<br>• நிதி முகாமைத்துவம் மற்றும் திட்டமிடல் சார்ந்த தொழில் அனுபவம்<br>• சிறிய நடுத்தர நிறுவனங்களில் வேலை செய்த அனுபவம்<br>• MS Office மென்பொருளை கையாளும் திறன்<br>• அறிக்கை எழுதுதல் மற்றும் தகவல் தொடர்பாடல் திறன் |

விண்ணப்பதாரிகள் **lk.ncdb@gmail.com** எனும் மின்னஞ்சல் முகவரிக்கு தொடர்பு கொண்டு தங்கள் பதவிநிலைக்கான விதிமுறைகள் மற்றும் விண்ணப்ப படிவத்தை மாசி 23ம் திகதிக்கு முன்னர் பெற்று பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2022 பங்குனி 04ம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்க வேண்டும். விண்ணப்பங்களை சமர்ப்பித்தவர்கள் மட்டுமே நேர்காணலுக்கு உள்வாங்கப்படுவார்கள்.

**வடக்கு கூட்டுறவு அபிவிருத்தி வங்கி,
கைதடி.**

**தலைவர்,**

(cr.37544) (2.6)

## மரண அறிவித்தல்



# சரவணமுத்து விசுவலிங்கம்

தாவளை இயற்றாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சரவணமுத்து விசுவலிங்கம் நேற்று (10.02.2022) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சரவணமுத்து - ஆச்சிமுத்து தம்பதியரின் அன்பு மகனும். நமசிவாயம் - மூத்தபிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும். நாகம்மாவின் அன்புக் கணவரும். திருலோகநாதன் (ஜேர்மனி). இராசேஸ்வரன் (ஜேர்மனி). திருலோகநாயகி. இராசேஸ்வரி ஆகியோரின் பாசமிகு தந்தையும். யமுனா (ஜேர்மனி). அகிலா (ஜேர்மனி). புஸ்பநாதன். யசோதரன் ஆகியோரின் அன்பு மாமனும். காலஞ்சென்றவர்களான வள்ளிப்பிள்ளை. நாச்சிப்பிள்ளை மற்றும் இராசம்மா. தங்கம்மா ஆகியோரின் சகோதரரும். திவியா. திவினன். திபேதன். சஷ்மியா. சயானா (ஜேர்மனி). டர்மினி. தர்சினி. சுலக்சன். பிரசாந். டிலக்ஷன். சசிராஜ். துதிமோகன். ஜெயப்பிரதாப். சாந்தி. ராதிகா ஆகியோரின் பேரனும். விசாலி. ஆதவி. ஆருஸ். தினோஜ். கம்ரிதன். தவன்சிகா ஆகியோரின் பாசமிகு பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.02.2022) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று. பூதவுடல் தச்சகாடு இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்
**077 869 0384**

(cr 37545) (2.6)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
04 - 05 - 1967



உதிர்வு
23 - 01 - 2021

# அமரர் விநாசித்தம்பி புஸ்பநேசன்

திதி: பூர்வபக்க தசமி (11.02.2022)

நேரம் கிடைக்கும் பொழுதெல்லாம் உங்கள்
பழைய ஞாபகங்களை எங்களுக்கு
நகைச்சுவையுடன் பகீர்ந்திடுவீர்கள்
எங்களை கண்டதும் ஆசையாய் ஓடிவந்து
அணைத்திடுவீர்கள்
உங்கள் ஆசீர்வாதம் இருக்கட்டும்
எங்கள் வாழ்க்கை முழுவதும்.

வெள்ளாம்போக்கட்டி,
கொடிகாமம்.

குடும்பத்தினர்

(cr.37544) (2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பீம ஏகாதசி உற்சவம்

பளை, பெப்.11

பளை, இயக்கச்சி மல்வில் கிருஷ்ணன் கோயிலில் பீம ஏகாதசி உற்சவம் நாளை இரவு 7 மணிக்கு நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

விசேட அபிஷேகத்தைத் தொடர்ந்து புராண பாராயணமும் அடியார்களின் பால் அபிஷேகமும் மறுநாள் சுவாமி ஊர்வலம் இடம்பெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-9)


## 15ஆம் ஆண்டு நீங்கா நினைவில்



**செல்வன் பத்மகாந்தன் சஞ்ஸீத்**

(மாணவன் - யா/ சாவகச்சேரி இந்துக்கல்லூரி)
(S.S.M. பொறியியல் கல்லூரி சேலம் - இந்தியா)

மண்மகிழ 19.03.1985 — கண்ணெகிழ 11.02.2007

ஆண்டுகள் பதினைந்து ஓடி மறைந்தாலும்
ஆறாது எம் துயரம் அகிலமதில் உள்ளவரை
கல்வி பயிலவென கடல் கடந்து சென்று
பல்கலையில் பயின்று பார்போற்ற வாழ்ந்திட
வல்லோனை வேண்டி வரங்கள் பல கேட்டிருந்தோம்
கண்ணோரா நீர்வழிய கனவுகளும் தானழிய
விண்ணோக்கிச் சென்றீரே! விதியதுவும்
- கொடியதுவே!!!

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம்சாந்தி !!!

**குடும்பத்தினர்**
"புனிதவாசம்"
மீசாலை கிழக்கு, மீசாலை.

(எ.37549) (2.7)

## 31ஆம் நாள் நினைவலைகள்

மண்ணில் 25 . 10 . 1941



விண்ணில் 12 . 01 . 2022

**அமரர் முத்துச்சாமி பஞ்சரத்தினம்**

(ஓய்வுநிலை யாழ் மாவட்ட செயலக உத்தியோகத்தர்)

எங்களின் உயர்வுக்காய் என்றுமே உழைத்தீர்கள்
தங்களின் கனவினை நனவாக்கினோம் அப்பா
திங்கள் பல ஆனாலும் தீராதே எம்துயரம்
உங்களின் பிரிவினை தாங்கிட முடியுமா?

12.01.2022 அன்று கொழும்பில் இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவரின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் 11.02.2022 இன்று முற்பகல் 11.00 மணியளவில் கொழும்பில் இடம்பெறும்.

நிரந்தர முகவரி
14, கதிரவேல் லேன்,
அரியாலை, யாழ்ப்பாணம்.

(CS 18615)(3/6)

**குடும்பத்தினர்**
**077 707 9094**

## மரண அறிவித்தல்

**நல்லதம்பி மகாலிங்கம்**

(ஓய்வுபெற்ற தபாலதிபர், J.P)

தோற்றம் 07.07.1939 — மறைவு 10.02.2022



செம்பாட்டு பிள்ளையார் கோவில் நீர்வேலி மத்தியை பிறப்பிடமாகவும் சண்டிலிப்பாய் வடக்கை வசிப்பிட மாகவும் கொண்ட நல்லதம்பி மகாலிங்கம் அவர்கள் நேற்று (10.02.2022) வியாழக்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நல்லதம்பி பொன்னாச்சி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ் சென்ற மகாலிங்கம் விசாலாட்சியின் பாசமிகு கணவரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.02.2022) வெள்ளிக்கிழமை ந.ப 12.00 மணிக்கு சண்டிலிப்பாய் வடக்கு சண்டிலிப்பாயில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இரட்டையர்புலம் வைரவர் கோயிலடி,
சண்டிலிப்பாய் வடக்கு.

தகவல் : குடும்பத்தினர்.
021 224 0077

(CS 18623)1-6

## மரண அறிவித்தல்

பிறப்பு 24 . 03 . 1940



இறப்பு 10 . 02 . 2022

**கந்தையா பேரம்பலம்**
**(செல்லத்தம்பி)**

யாழ். மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும் அரியாலையை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்தம்பி என அன்பாக அழைக்கப்படும் கந்தையா பேரம்பலம் அவர்கள் நேற்று (10.02.2022) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா சிதம்பரப்பிள்ளை தம்பதியரின் கனிஷ்ட புதல்வனும், நாகேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை மாரிமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்றவர்களான பகவதி, முருகேசு, தன லட்சுமி, மகேஸ்வரி, நல்லதம்பி, சொக்கலிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரரும், ரஜிதா (லண்டன்), கபிலாஜினி (கனடா), தனுஜா (பின்லாந்து), துவாரகா ஆகியோரின் அன்புத் தந்தையும், தவராஜா, ஸ்ரீகரன், பார்த்தீபன், நிரோஷன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், நந்தஹரி, டினேஷ்ஹரி, கிஷாந்ஹரி, பர்னிகா, அஸ்வின், ஆரவ், கவிநயா, பவன்யா ஆகியோரின் அன்புமிகு பேரனும், பராக்கிரமசிங்கம், காமாட்சி அம்மாள், வெங்கையா, அமிர்தலிங்கம், இரத்தினேஸ்வரி, காலஞ்சென்ற பஞ்சலிங்கம் (முன்னாள் உதவிக்கல்விப் பணிப்பாளர், யாழ். கல்வி வலயம்), பாலசுப்பிரமணியம், தியாகலிங்கம், சரஸ்வதி, கோசலாதேவி, யோகாதேவி, காலஞ்சென்ற சோதிலிங்கம், மகாலிங்கம் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.02.2022) வெள்ளிக்கிழமை இல.98, கலைமகள் வீதி, அரியாலையில் உள்ள அவரின் இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப. 11.00 மணி யளவில் அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொ[illegible]

இல.98, கலைமகள் வீதி,
அரியாலை.

தக[illegible]
077 403 5586
077 358 6549

(CS 18624)

## மரண அறிவித்தல்

மலர்வு 21 . 02 . 1935



உதிர்வு 08 . 02 . 2022

**திரு.யோசப் பிரான்சிஸ்**

நாவாந்துறையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திரு. யோசப் பிரான்சிஸ் கடந்த (08.02.2022) அன்று இறையடி சேர்ந்தார்.

அன்னார் அமரர்களான வேலுயோசப் ஆனாசி ரட்ணம் மண இணையரின் அன்பு மகனும், வைத்தி இன்னாசி சொர்ணம்மா மண இணையரின் அன்பு மருமகனும், பிறதர் சந்தியா அவர்களின் பெறாமகனும், தங்கமலர் மரியபுஸ்பம் அவர்களின் அன்புக் கணவரும், செல்வி (நோர்வே), ஷகிலா (நோர்வே), அனுரா (பொதுசன நூலகம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், அன்ரனி ஸ்ரீதர் (நோர்வே), யூலியஸ் நிமல் (நோர்வே) யசிதரன் (சால்பன் வீடியோ) ஆகியோரின் அன்பு மாமனாரும், யுலைன் (நோர்வே), சுபேட்ஸ் (நோர்வே), நிகிந் (நோர்வே), இன்பன்ரா (நோர்வே), நிம்பிரான்சன் (நோர்வே), ஷால்பன், சரோன், ஷாய்ஷா ஆகியோரின் பாசமிகு பேரனும், ஆவார்.

அன்னாரின் இறுதிப் பயணம் நாளை (12.02.2022) சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு 6/5, மூன்றாம் குறுக்கு வீதி, நாவாந்துறை வடக்கு யாழ்ப்பாணம் முகவரியில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்திலிருந்து ஆரம்பமாகி சென் மேரிஸ் சனசமூக நிலையத்தில் அஞ்சலி நிகழ்வின் நிறைவில் புனித பரலோக மாதா ஆலயத்தில் இரங்கல் திருப்பலியின் முடிவில் நாவாந்துறை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் [illegible]மாறு கேட்டுக்கொள்கின்றோம்.

[illegible]டர்புகள்
077 066 6014
077 326 6533

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 1821) 1/6


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பயங்கரவாதத்...

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நீதித்துறை சுயாதீனமானது. அதில் யாரும் செல்வாக்கு செலுத்துவதில்லை என நீதி அமைச்சர் சபையில் தெரிவித்தார். அவர் தெரிவித்த கருத்து உண்மை. ஆனால் 20ஆவது திருத்தம் கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்பட்டதன்மூலம் நிறைவேற்று அதிகாரமுடையவருக்கு, நீதித்துறையில் அதிகாரம் செலுத்தக்கூடியதாக இருக்கின்றது. மறைமுகவாகவே நிறைவேற்று அதிகாரமுடையவரின் தலையீடு நீதித்துறையில் ஏற்படுகின்றது. அதனால்தான் 20ஆவது திருத்தச் சட்டத்தை அனைவரும் எதிர்க்கின்றனர்.

பயங்கரவாதத் தடைச் சட்டம் எவ்வாறு துஷ்பிரயோகம் செய்யப்படுகின்றது என்பது தொடர்பாக, சர்வதேச நாடுகளில் குறிப்பாக ஐரோப்பிய நாடுகளில் பேசி வருகின்றனர். முக்கியமான சரத்துக்கள் பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் திருத்தப்படவில்லை என அவர்கள் தெரிவித்திருக்கின்றனர். பயங்கரவாதத் தடைச்சட்ட திருத்தத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்தங்களை அவர்கள் குறிப்பிட்டிருக்கின்றனர். அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் திருத்தச் சட்டவரைவை சபைக்கு சமர்ப்பித்திருந்தார். ஐரோப்பிய நாடுகள் கேட்டுக்கொண்டுள்ள திருத்தங்கள் தொடர்பில் கேள்வியெழுப்பியபோது அவர் மழுப்பும் வகையில் பதிலளிக்கின்றார்.

சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லாஹ் 22மாதங்கள் தடுத்துவைக்கப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டிருக்கிறார். காண ஹிஜாஸ் ஹிஸ்புல்லாவுக்கு பிணை வழங்கித் தீர்ப்பளித்த நீதிபதி நீல் இத்தவல, தனது தீர்ப்பில் தெரிவித்திருக்கும் விடயங்களை அனவரும் வாசிக்க வேண்டும். அவரது தீர்ப்பில், பயங்கரவாத தடைச்சட்டம் தற்காலிகமாகவே அறிமுகப்படுத்தப்பட்டதாகும். விடுதலைப்புலிகளை அடக்குவதற்கே அறிமுகப்படுத்தப்பட்டது. ஆனால் இன்று அது அரசியல் பழிவாங்கல் போன்ற மோசமான செயல்களுக்குப் பயன்படுத்தப்படுகின்றது என தெரிவித்திருக்கின்றார். நீதியரசர் நீல் இத்தவல இந்த நாடாளுமன்றத்தில் சேவை செய்த சிறந்த அதிகாரியாவார் - என்றார். (அ-எ-22)

## நில...

வடக்கு - கிழக்கு மாகாணங்களின் இணைப்புப் புள்ளியான கொக்கிளாய் தொடக்கம் நாயாறு வரையான தமிழ் மக்களுக்குச் சொந்தமான பாரம்பரிய நிலங்களை கனிய மணல் அகழ்வு எனும் போர்வையில் கையகப்படுத்தும் நோக்கோடு நில அளவீடு மேற்கொள்ளப்பட்டு சுவீகரிப்பதற்க்கான ஏற்பாடுகள் மிகத் தீவிரமாக அரசால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

ஏற்கனவே சிங்களக் குடியேற்றங்களாலும், இராணுவ ஆக்கிரமிப்பாலும் மகாவலி எல் வலயத்தாலும், வன ஜீவராசிகள் திணைக்களம், வளவளத் திணைக்களம், தொல்லியல் திணைக்களம் போன்ற அரச இயந்திரங்களின் திட்டமிட்ட ஆக்கிரமிப்பால் இருப்பு கேள்விக்குள்ளாகிவரும் நிலையில், தமிழ் மக்களின் எல்லை கிராமங்களில் மேலதிகமாக கனிய மணல் கூட்டுதாபனத்துக்கு என மிகுதி நிலங்களையும் அபகரிக்கும் வேலையை அரசு மிக திட்டமிட்டு முன்னெடுத்துவருகின்றது.

தமிழ் மக்களுக்குச் சொந்தமான இந்த நிலங்களை அபகரிப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து கொக்கிளாய் கிராம மக்களால் எதிர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளது. இந்தப் போராட்டத்துக்கு அனைத்து தரப்பினரும் ஆதரவு வழங்க வேண்டும் என்று கொக்கிளாய் எல்லை கிராம மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (எ-இ)

## இடம்பெயர்ந்த...

செய்யப்பட்டுள்ளன என்று தெரியவருகின்றது.

பல்கலைக்கழகத்தின் நுழைவாயில் ஊடாகச் சென்று பீடங்களுக்குப் பிரிந்து செல்லும் பிரதான இடத்தில் முக்கோண வடிவில் பிரதான கல்வெட்டு ஒன்று அமைக்கப்பட்டிருந்தது. உட்செல்லும் போது காட்சிக்குப் புலப்படும் வகையில் தமிழ் மொழியிலும், ஏனைய இரு பக்கங்களில் ஆங்கிலம் மற்றும் சிங்கள மொழிகளிலும் அந்தக் கல்வெட்டு அமைக்கப்பட்டிருந்தது.

இந்தநிலையில் உட்செல்லும்போது காட்சிக்குப் புலப்படும் பிரதான பகுதியில் சிங்களமொழி இடம்பெறுமாறு கல்வெட்டில் திடீரென மாற்றம் செய்யப்பட்டுள்ளது. ஏனைய இரு பகுதிகளிலுமே, தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளும் வருமாறு கல்வெட்டு அவசர அவசரமாக மாற்றப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (அ-எ-18)

## விகிதாசார...

தீர்மானித்துள்ளது.

நீண்ட நாள்களுக்கு பின்னர் நேற்றுக் கூடிய தேர்தல்முறை சீர்திருத்தக் குழுக் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சித் தேர்தல் முறையிலும் சில சீர்திருத்தங்களைச் செய்யவும் யோசனையை அரசுக்கு முன் வைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று தெரிகின்றது.

தேர்தல் முறை எவ்வாறானது? கலப்புமுறையிலான தேர்தலை அறிமுகப்படுத்துவதாயின் தொகுதி மற்றும் விகிதாசாரம் என்பன எவ்வாறாக அமைய வேண்டும்? என்பன தொடர்பாகவும் கூட்டத்தில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

தேர்தல்முறை சீர்திருத்தக் குழுவின் அடுத்த கூட்டம் நாடாளுமன்றத் தொகுதியில் எதிர்வரும் 22ஆம் மற்றும் 24ஆம் திகதி நடைபெறவுள்ளது என்றும், இந்தத் தீர்மானங்கள் தொடர்பில் அதில் ஆய்வு செய்து முடிவுகள் எடுக்கப்படவுள்ளன என்றும் அறிய முடிகின்றது. (அ-எ-இ)

## போராட்டத்துக்கு...

இடைக்காலத் தடையுத்தரவு பிறப்பித்துள்ளது.

அரச தாதியர் சங்கம் மற்றும் அதன் தலைவர் சமன் ரத்னபிரிய ஆகியோருக்கு எதிராக சட்டமா அதிபர், இந்தச் சங்கத்தின் தொழிற்சங்க நடவடிக்கையை உடனடியாக இடைநிறுத்த வேண்டும் என்று உத்தரவு பிறப்பிக்கக் கோரி வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.

சட்டமா அதிபர் திணைக்களம் நீதிமன்றத்தில் முன்வைத்த விடயங்களை ஆராய்ந்த போதே நீதவான் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

இந்தத் தொழிற்சங்க நடவடிக்கை காரணமாக மருத்துவமனைகளில் நோயாளர் பராமரிப்பு சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன என்று சட்டமா அதிபர் சார்பில் மேலதிக சொலிசிட்டர் ஜெனரல், ஜனாதிபதி சட்டத்தரணி விக்கும் டி ஆப்ரூ நீதிமன்றத்தில் சுட்டிக்காட்டினார். அதையடுத்து, கொழும்பு நீதிவான் அருண அளுத்கே இடைக்காலத் தடையுத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

தாதியர்கள், நிறைவுகாண் மருத்துவ சேவைகள், மேலதிக மருத்துவ சேவை உள்ளிட்ட 18 சுகாதார தொழிற்சங்கங்கள் இணைந்து ஆரம்பித்துள்ள பணிப்புறக்கணிப்புப் போராட்டம் நான்காவது நாளாக நேற்றும் தொடர்ந்தது.

ஆசிரியர்களின் சம்பள முரண்பாடு நீக்கப்பட்டதன் பின்னர் சுகாதார ஊழியர்களின் சம்பளத்தில் பெரும் முரண்பாடு உருவாகியுள்ளது என்று சுகாதார தொழிற்சங்கங்கள் கூறுகின்றன.

சம்பள முரண்பாடு நீக்கப்பட்டதன் பின்னர் பயிற்சிபெறாத ஆசிரியர் ஒருவருக்கு கிடைக்கும் சம்பளம் தொழில்சார் பட்டப்படிப்பை பூர்த்தி செய்த தாதியரின் சம்பளத்தை விடவும் அதிகரித்துள்ளது என அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். அதனால் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தயாரித்துள்ள சம்பளம் தொடர்பிலான வரைவை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று தொழிற்சங்கங்கள் கோரிக்கை விடுத்துள்ளன. (அ-எ-இ)

## வடக்கு...

வழங்குகின்றது. எமது மீனவர்களின் அழிவுக்கு இலங்கை கடற்படையும், இலங்கை அரசுமே பொறுப்புக் கூற வேண்டும்.

- இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார். நாடாளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டவரைவு மீதான இரண்டாம் நாள் விவாதத்தில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கு மாகாண மீனவர்கள் தமது நாளாந்த வாழ்வாதாரத்தை இழக்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது. எமது கடற்பரப்புக்கு அப்பால் உள்ள மக்கள் எமது எல்லைக்குள் வருவதுடன் சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபடுகின்றனர். அதுமட்டுமல்லாது எமது வடக்கு மாகாண மீனவர்களின் மீன்பிடி வளங்களையும் சேதப்படுத்தும் நிலைமை காணப்படுகின்றது. வடமாகாணத்தை பொறுத்தவரை 50 ஆயிரம் குடும்பங்கள் மீன்பிடித் துறையுடன் நேரடியான தொடர்பில் உள்ளனர். இரண்டு லட்சம் தனி நபர்கள் நேரடியாக மீன்பிடியில் ஈடுபடுகின்றனர். யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை 23 ஆயிரம் மீனவக் குடும்பங்களைச் சேர்ந்த ஒரு இலட்சத்துக்கும் அதிகமான தன நபர்கள் நேரடியாக மீன்பிடி தொழிலில் ஈடுபடுகின்றனர்.

வடக்கு மாகாணத்தை சாராத இலங்கை மீனவர்கள் இலங்கை கடற்படை மற்றும் பாதுகாப்புப் படைகளின் அனுமதியுடன் வருவதுடன், சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபடுவதால் எமது உள்ளூர் மீனவர்கள் அதிக துன்பங்களை எதிர்கொள்ள நேர்ந்துள்ளது. அதேபோல் தமிழ்நாடு மீனவர்கள் சட்ட விரோதமாக எமது எல்லைக்குள் வந்து மீன்பிடியில் ஈடுபடுவது தொடர்பாக தொடர்ச்சியாக நாம் மீன்பிடித்துறை அமைச்சின் குழுக்களிலும், பல சந்தர்ப்பங்களில் நாடாளுமன்றத்திலும் முறையிட்டுள்ளோம்.

வடக்குக்கு வெளியில் உள்ள மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடிச் செயற்பாடுகள் காரணமாக சேதமாக்கப்பட்டுள்ள எமது மீனவர்களின் சொத்துக்கள் 600 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமாகும். யாழ்ப்பாணத்தை எடுத்துக்கொண்டால் 250 மில்லியன் ரூபா அளவிலான சொத்துக்கள் அழிக்கப்பட்டுள்ளன. ஆனால் இவற்றை அரசு கண்மூடித்தனமாக வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கின்றது.

தமிழர்களின் காணிகளை அபகரித்து ஒரு ஆக்கிரமிப்புப் படையாக இங்கே இருக்கின்ற இலங்கைக்" கடற்படை, தமிழ் மீனவர்கள் மீதான இந்த அத்துமீறல்களை அனுமதிப்பதன் மூலம் வடக்கு-கிழக்கு மீனவ சமூகத்தை மேலும் மேலும் வறுமைப்படுத்தி அவர்களை இந்தப் பகுதியில் இருந்து தாமாகவே வெளியேறச் செய்யும் ஒரு இனப்படுகொலை நிகழ்ச்சி நிரலாகவே நான் இதைப் பார்க்கிறேன். அரசின் இந்தப் பராமுகம் திட்டமிட்ட ஒரு இனப் படுகொலை நிகழ்ச்சி நிரலின் ஒரு அங்கமே .

வடக்கு மக்களின் வாக்குகளால் தெரிவு செய்யப்பட்டுள்ளேன் எனக் கூறிக்கொள்ளும் கடற்றொழில் அமைச்சர் மிகக் கேவலமாக முதுகெலும்பு அற்றவராக, கையாலாகதவராக அரச தரப்பில் இருந்து கொண்டு தனக்கு வாக்கு போட்ட மக்களுக்கெதிராகவே செயற்படுகிறார்.

இவற்றால்தான் பிரச்சினைகளின் அடிப்படைகள் தொடர்பாகப் பேசவேண்டும், அதிகாரங்கள் எம்மிடம் வரவேண்டிய தேவை தொடர்பாகப் பேசவேண்டும் என நாம் எதிர்பார்க்கிறோம், மாறாக வெறுமனே ஒற்றையாட்சி என்றும் 13 ஆவது திருத்தம் என்றும் பேசிக்கொண்டிருப்பது, பிரச்சினையின் அடிப்படையை மடைமாற்றும் செயலே.

இந்திய மீனவர்களின் அத்துமீறல் தொடர்பாக நாம் கொண்டுவரவிருந்த ஒத்திவைப்பு பிரேரணையை ஒத்திவைக்க வேண்டும் என்றும், தாம் இந்த விடயம் தொடர்பாக உடனடியாக காத்திரமான நடவடிக்கை எடுப்போம் என்றும் இந்தியத் தூதரகம் எமக்கு அறியத்தந்திருக்கிறது.

அதேவேளை , இந்த விடயத்தில் உண்மையில் சொந்த நாட்டு மக்களின் பாதுகாப்பு தொடர்பாக உத்தரவாதப்படுத்த வேண்டிய இலங்கை அரசு ஒன்றுமே செய்யாதிருக்க, வெளிநாடு ஒன்று இந்த விடயத்தில் உத்தரவாதம் தரவேண்டியிருக்கிற நிலைமை இங்கு நிலவுகிறது - என்றார். (அ-எ-22)

## மன்னாரில்...

தலைமன்னாரில் முன்னரே அறிவிக்கப்பட்டபடி, ஏல விற்பனை நடைபெறவில்லை.படகுகளை ஏலமெடுக்கச் சென்றவர்களும், ஏலத்தை நடத்தச் சென்ற அதிகாரிகளும் அங்கு படகுகள் இல்லாததால் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

அரசுடமையாக்கப்பட்ட தமிழகப் படகுகள் ஏலத்தில் விற்கப்படும் என்று நீரியல் வளத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தால், மாவட்டப் பிரதிப் பணிப்பாளர்களுக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

கடந்த மூன்று நாள்களாக யாழ்ப்பாணத்தில் ஏல விற்பனை நடைபெற்றிருந்த நிலையில், நேற்று தலைமன்னாரில் 9 கடற்கலங்கள் ஏலத்தில் விற்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

அதற்கமைய நேற்று ஏலம் நடத்துவதற்குச் சென்ற அதிகாரிகளும், படகுகளை ஏலத்தில் எடுக்கச் சென்றவர்களும் அங்கு படகுகள் எவையும் இல்லாததால் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றுள்ளனர்.

இந்தப் படகுகள் கடற்படையினரின் பாதுகாப்பில் இருந்த நிலையில்,அவை கடலுக்குள் மூழ்கி அழிந்து விட்டன என்றும், அது தொடர்பாக கடந்த ஆண்டு நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது என்றும் கடற்படையினர் தெரிவித்துள்ளனர். (அ-எ-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
04 . 05 . 1953

உதிர்வு
26 . 01 . 2018

## அமரர் வி.எம்.கணபதிப்பிள்ளை புலேந்திரன்

(உரிமையாளர் - நியூ V.M.K. ஜுவல்லர்ஸ் - இல. 15, நவீனசந்தைக் கட்டடம், கண்டி வீதி, சாவகச்சேரி)

ஸ்தாபகர் - V.M.K. மில்ஸ்

**திதி: 11.02.2022 வெள்ளிக்கிழமை**

குடும்பத்தின் குலவிளக்காய்
பாசத்தின் பிறப்பிடமாய்
பண்பின் உறைவிடமாய்
வாழ்வின் வழிகாட்டியாய்
வாழ்ந்த எம் குலவிளக்கே!

தரணியில் எங்களை தவிக்கவிட்டு
தனியாக நீங்கள் மட்டும் எங்கு சென்றீர்கள்...
நடந்தது கனவாகாதா என ஏங்குகின்றோம்.

இல்லாளுக்கு தலைவன் இல்லை
பிள்ளைகளுக்கு தந்தை இல்லை
சூரியனே! நீ இன்றி எங்களுக்கு
ஒளியே இல்லை...

இறைவனோடு நீங்கள் - கனத்த
இதயத்தோடு நாங்கள்...

எண்ணிய பொழுதெல்லாம்
கண்ணில் நீர் கசிகிறதே!
உணர்வால் உள்ளத்தால்
வாழும் தெய்வமாகி
ஒளியாகி எமக்கெல்லாம் வழியாகி
எம் இதயங்களில் வாழ்கின்றீர்!

**உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்!**

கண்டி வீதி, சாவகச்சேரி.

**V.M.K. குடும்பத்தினர்.**

(cr.37531) (2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 11.02.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.